සුගතදාස ජාතික ක්‍රීඩා සංකීර්ණ අධිකාරිය
சுகததாச தேசிய விளையாட்டு கட்டடத் தொகுதி அதிகார சபை
Sugathadasa National Sports Complex Authority



# වාර්ෂික වාර්තාව

# வருடாந்த அறிக்கை

# Annual Report

# 2020

# வருடாந்த அறிக்கை
# 2020

**சுகததாச தேசிய விளையாட்டு கட்டத் தொகுதி அதிகார சபை**

**விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு**



சுகததாச தேசிய விளையாட்டு கட்டத்தொகுதி அதிகார சபை
1999 இலக்கம் பாராளுமன்ற சட்டம் மற்றும்
2017 இலக்கம் 14 கொண்ட (மறுசீரமைப்பு சட்டம்) மூலம் சட்டமாக்கப்பட்டுள்ளது.

1. அறிமுகம்
2. சுகதாச தேசிய விளையாட்டுக் கட்டத் தொகுதி அதிகார சபையின் முகாமைத்துவ சபை
3. சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டத் தொகுதி அதிகார சபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு.
4. சுகததாச தேசிய விளையாட்டு கட்டத் தொகுதி அதிகார பதவிநிலை உத்தியோகத்தர்கள்
5. எமது நோக்கம் மற்றும் பணிக்கொடை
6. நிறுவனத்தின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு.
7. அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் சபை
8. சுகததாச தேசிய விளையாட்டு கட்டத்தொகுதி அதிகார சபையின் சபையின் நோக்கம்.
9. அதிகார சபையின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள்
10. வசதிகள் மற்றும் சேவைகள் வழங்கப்படும்துறைகள்.
11. மானிட வள அபிவிருத்தி
12. முகாமைத்துவ அறிக்கை
13. முகாமைத்துவ சபைக் கூட்டம் - 2020
14. சுகததாச தேசிய விளையாட்டு கட்டத்தொகுதி அதிகார சபையின் கணக்காய்வு செயற்பாடுகள் - 2020
15. சுகததாச தேசிய விளையாட்டு கட்டத்தொகுதி அதிகார சபையின் கணக்காய்வு செயற்பாடுகள் - 2020
16. பொருள் ஆய்வு - 2020
17. வருடாந்த பெறுகை
18. சுகததாச உள்ளக விளையாட்டுத் திடல்
19. உள்ளக விளையாட்டுத்திடல்
20. துணை விளையாட்டுத்திடல்
21. நீச்சல் தடாக கட்டத் தொகுதி
22. உடற்பயிற்சி மத்திய நிலையம்
23. விளையாட்டு ஹோட்டல்
24. சுகததாச உள்ளக விளையாட்டுத்திடல் சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றங்கள்
25. சுகததாச உள்ளக விளையாட்டுத் திடலின் 2021 ஆண்டிற்கான உத்தேச அபிவிருத்தி செயற்திட்டங்கள்.
26. சுகததாச திறந்தவெளியரங்கு விளையாட்டுத்திடல்
27. சுகததாச திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானம் சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றங்கள்
28. சுகததாச திறந்த வெளியரங்கு விளையாட்டு மைதானத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான உத்தேச அபிவிருத்தி செயற்திட்டங்கள்.
29. இணை நிறுவனங்கள் மற்றும் விளையாட்டுத்திடல் வளாகம்
30. போகம்பர திறந்தவெளி விளையாட்டுத் திடல்.
31. போகம்பர திறந்தவெளி விளையாட்டுமைதானம் சாந்த அபிவிருத்தி செயற்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றங்கள்.
32. போகம்பர திறந்தவெளி விளையாட்டு மைதானத்தில் 2021 ஆண்டிற்கான உத்தேச அபிவிருத்தி செயற்திட்டங்கள்
33. நுவரெலிய குதிரைப்பந்தய விளையாட்டு மைதானம்
34. பொலியத்தை மற்றும் வீரகெடிய நீச்சல் தடாகம்
35. ஆர் பிரேமதாச சர்வதேச விளையாட்டு மைதானம்
36. கணக்காய்வுக் கொள்கைகள் 2020
37. நிதி வெளிப்பாடுகள்
38. வருமான மற்றும் செலவின வெளிப்பாடுகள்
39. ஐந்தொகை
40. நிதி பாய்ச்சல் வெளிப்பாடுகள்
41. விளையாட்டு மைதானத்திற்கு அமைய வருமானம் 2020
42. நிறுவனத்தின் மொத்த முன்னேற்றங்கள்
43. நிறுவனத்தின் மொத்த கடன்
44. கணக்காய்வளர் அறிக்கை 2020
45. கணக்காய்வாளர் அறிக்கைக்காக சமகாலப்படுத்தப்பட்ட தகவல்கள்

# அறிமுகம்



சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி பொறுப்பு நிதியமாக 1995.02.01 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் விளையாட்டுத்துறை அமைச்சிற்கு பொறுப்பளிக்கப்பட்டதுடன், 1999 ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபையாக மாற்றியமைக்கும் நோக்குடன் 1999 இலக்கம் 17 கொண்ட சட்டம் பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட்டது. அச் சட்டத்தின் மூலம் 1999.09.01 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத் தொகுதி அதிகார சபையாக தாபிக்கப்பட்டது.

காலத்தின் தேவைக்கு அமைய முகாமைத்துவ சபையின் ஆலேசனைகள் மற்றும் அங்கீகாரத்திற்கு அமைய பிரதான கொள்கைப் பிரகடணத்தின் வாசகத்தை மறுசீரமைத்து 2017 ஆகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 2017 இலக்கம் 14 கொண்ட (மறுசீரமைப்பு) சட்டமும் இதற்கு உரியதாகும்.

இவ் அதிகாரசபையின் முகாமைத்துவ செயற்பாட்டுப் பணிகள் பதினொரு பேர்களைக் கொண்ட (11) முகாமைத்துவ சபையினால் மேற்கொள்ளப்படுவதுடன், இச் சபை கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

- விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் செயலாளர் அல்லது பிரதிநிதி.
- தேசிய அரச போரவையின் 1973 இலக்கம் 5 கொண்ட விளையாட்டு சட்டத்தின் மூலம் நியமிக்கப்படும் பணிப்பாளர் நாயகம். தேசிய
- திறைசேரின் பிரதிநிதி உட்பட,
- விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படும் தலைவர், செயற்பாட்டுப் பணிப்பாளர் உட்பட பணிப்பாளர் சபையின் 08 அங்கத்தவர்களைக் கொண்டதாக சபை நியமிக்கப்படும்.

**2020.02.07 ஆம் திகதி நியமிக்கப்பட்ட முகாமைத்துவ சபை**

1. திரு. நளிந்த இலங்கோன் அவர்கள் - தலைவர்
2. திருமதி பீ.பீ.கே. அபேகுணவர்தன – அங்கத்தவர்
3. (மேலதிக செயலாளர் - விளையாட்டுத்துறை அமைச்சு)
4. திரு. ஏ.ஜே.எஸ்.எஸ். எதிரிசூரிய அவர்கள் - அங்கத்தவர்
5. (பணிப்பாளர் நாயகம் - விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்)
6. திரு. இந்திக பிரேமரத்ன அவர்கள் - அங்கத்தவர்
7. (பணிப்பாளர் - நிதி அமைச்சு)
8. திரு. வை.கே. குளரத்ன அவர்கள் - அங்கத்தவா
9. திரு. அனில் வீரசிங்க- அங்கத்தவர்
10. திரு.சீ.ஏ.நிரோச நதுன் - அங்கத்தவர்
11. திரு.எம்.வீ.ஜீ. ரம்யாசந்திரா குணசேகர –அங்கத்தவர்
12. திரு டி.டப். புதாசிங்ஹ - அங்கத்தவர்

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சபை – 2020.12.31 ஆம் திகதியன்று.**

1. திரு. இந்திக பிரேமரத்ன - குழுத் தலைவர்
2. (பணிப்பாளர், வெளிநாட்டு வளத்திணைக்களம், நிதி அமைச்சு)
3. திருமதி.பீ.பீ.கே. அபேசிரிகுணவர்தன - குழு அங்கத்தவர்
4. (மேலதிக செயலாளர், இளைஞர் விவகார அமைச்சு)
5. ஏ.ஜே.எஸ்.எஸ். எதிரிசூர்ய – குழு அங்கத்தவர்
6. (பணிப்பாளர் நாயகம், விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்)
7. திரு. டி.எம். பிரதாபசிங்ஹ - குழு அங்கத்தவர்
8. திரு. அனில் வீரசிங்ஹ - குழு அங்கத்தவர்
9. திருமதி.எஸ்.என். ஹபுயாரச்சி – மேற்பார்வை மட்டத்தின் பங்கேற்பு
10. திரு. எச்.டி.ஜுட். பெரேரா – மேற்பார்வை மட்டத்தின் பங்கேற்பு

**அதிகார சபையின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் - 2020.12.31 ஆம் திகதியன்று**

- பணிப்பாளர் - திரு. எஸ்.எஸ்.கே. குணவர்தன அவர்கள்
- உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) – திரு. சீ. அநுராத விதானகமாச்சி அவர்கள்
- உதவிப் பணிப்பாளர் (நிதி) – திரு. டப்.எம்.பீ.எஸ். பண்டார பியதாச
- செல்வி. உதவிப் பணிப்பாளர் (விளையாட்டு) – டப்.எம்.வை.ஏ.விஜேசூர்ய
- சட்ட உத்தியோகத்தர் - எச்.கே.எம்.கே. ராஜித அவர்கள்
- நிருவாக உத்தியோகத்தர் - திருமதி எச். அனோஜா பிரியதர்சனி
- தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் - கே. பந்துதிலக அவர்கள்
- விளையாட்டு முகாமையாளர் (உள்ளக) – திருமதி. டி.டி.எஸ். லியனராச்சி
- விளையாட்டு தைான முகாமையாளர் (திறந்தவெளி) – திருமதி பீ.டி.என். பிரபா கிரியல்ல
- விளையாட்டு முகாமையாளர் (ஒதுக்கீடு) – திரு. பீ.டி. சம்பத் பெரேரா அவர்கள்
- விளையாட்டு முகாமையாளர் (போகம்பர) – எஸ்.சீ. விக்ரமசூர்ய அவர்கள்
- கொள்வனவு / சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் - செல்வி. எஸ்.கே.டி. சானிகா பிரபாஸ்வரி
- கணக்கு உத்தியேகாத்தர் - செல்வி. எம்.என். திசாநாயக்க கணக்கு உத்தியோகத்தர்
- பர்துகாப்பு முகாமையாளர் (உள்ளக) (பதில்) – டப்.டி. சமரதுங்க அவர்கள்

**தயாரிப்பாளர்**

**மேற்பார்வை :**
திரு. விமல் எஸ்.கே. லியனகம (பணிப்பாள் பதில்)
திருமதி எச். அனோஜா பிரியதர்சனி(உதவிப் பணிப். பதில்).

**கணணி தட்டெழுத்து /ஒழுங்கமைப்பு :**
திரு. திலினி சசிரங்க முதுநாயக்க (முகாமைத். உதவியாளர்)

**மொழியொர்ப்பாளர் (தமிழ், அங்கிலம்) :**
எம். நுஸ்ரத் (அரச மொழிபெயர்ப்பாளர்)

**அச்சகம்:** சலலிஹினி தொலைக்காட்சி நிறுவகம்

**வங்கி**
இலங்கை வங்கி - கிரான்ட்பாஸ் கிளை

**முகவரி**
சுகததாச தேசிய விளையாட்டு கட்டத் தொகுதி அதிகார சபை
த.பொ. 2211, ஆதர் டி சில்வா மாவத்தை
கொழும்பு 13.

**தொலைபேசி :** 011-2445677, 2384385

**பக்ஸ் :** 011-2445675

**மின் அஞ்சல் முகவரி :**
sugathadasaindoor@gmail.com

## எமது நோக்கு மற்றும் பணிக்கூற்று

### நோக்கு

ஆசியாவின் முதல் தர சர்வதேச மட்டத்திலான விளையாட்டு வசதிகள் கொண்ட விளையாட்டுக் கட்டிடத் தொகுதியாக சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதியை மாற்றியமைத்தல் மற்றும் அதற்குரிய ஏனைய விளையாட்டுக் கட்டிடத் தொகுதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் இலங்கையின் விளையாட்டு அபிவிருத்தியிற்கு வசதிகளை சலுகை அடிப்படையில் வழங்குதல்.

### பணிக்கூற்று

சர்வதேச மட்டத்திலான வசதிகளை வழங்குவதன் மூலம் இலங்கையின் விளையாட்டுத்துறையின் முன்னேற்றத்திற்கு பங்களிப்பு செய்தல் மற்றும் இலங்கையின் விளையாட்டு வீரர்களின் திறமைகளை மேம்படுத்துவதற்கு சிறந்த வசதிகள் கொண்ட முன்னனி சர்வதேச கட்டிடத் தொகுதியாக மாற்றியமைத்தல்.



**சுகததாச உள்ளக விளையாட்டுத்திடல்**

## நிறுவனத்தின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு



**அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் சபை**

முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் நிறுவனத்தின் சேவையின் தேவைக்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் சபை தகவல்களுக்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் சபை 378 என்பதுடன் ஒரு பதவி ஒப்பந்த அடிப்படையில் அங்கீரிக்கப்பட்டுள்ளது. இதில் 2020.12.31 ஆம் திகதியனற்று சேவையில் ஈடுபட்டு இருக்கும் நிரந்தர ஊழியர் எண்ணிக்கை 310 ஆகும். அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் நிறுவனத்தில் சேவையாற்றிய ஊழியர் எண்ணிக்கை 82.01% மாத்திரம் என்பதுடன் அதனை கீழ் குறிப்பிடப்பட்டவாறு குறிப்பிட முடியும்.

| பதவி | சம்பள குறியீடு | அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர ஊழியர் எண்ணி | ஓப்பந்த அடிப்படைக்கு அமைய அங்கீரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | 2020.12.31 ஆம் திகதியன்று ஊழியர் எண்ணிக்கை | 2020.12.31 ஆம் திகதியன்று ஒப்பந்த அடிப்படைக்கு அமைய ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்கள் / மேலதிகம் |
|---|---|---|---|---|---|---|
| தலைவர் | | | | | | |
| செயற்பாட்டுப் பணிப்பாளர் | | | | | | |
| **சிரேஷ்ட மட்ட முகாமையாளர்** | | | | | | |
| பணிப்பாளர் | HM 1-1 | 1 | - | 1 | - | 0 |
| **இடைநிலைய மட்ட முகாமையாளர்** | | | | | | |
| பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) | MM 1-3 | 1 | - | 1 | - | 0 |
| பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (நிதி) | MM 1-3 | 1 | - | 1 | - | 0 |
| பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (விளையாட்டு) | MM 1-3 | 1 | - | 1 | - | 0 |
| பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்) | MM 1-3 | 1 | - | 1 | - | 0 |
| பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (மின் / தொழில்) | MM 1-3 | 1 | - | 0 | - | 1 |
| சட்ட உத்தியோகத்தர் | MM 1-3 | 1 | - | 1 | - | 0 |
| பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (த.தொ /ஊட) | MM 1-3 | 1 | - | 0 | - | 1 |
| பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (திட்டம்) | MM 1-3 | 1 | - | 0 | - | 1 |
| தள நிருவாக ஆலோசசகர் | MM 1-3 | 1 | - | 0 | - | 1 |
| **கனிஷ்ட மட்ட முகாமையாளர்** | | | | | | |
| தலைவரின் அந்தரங்க செயலாளர் | JM 1-1 | 0 | 1 | - | - | 0 |
| உள்ளக கணக்காய்வாளர் | JM 1-1 | 1 | - | 0 | - | 1 |
| நிருவாக உத்தியோகத்தர் | JM 1-1 | 1 | - | 1 | - | 0 |
| கணக்கு உத்தியோகத்தர் | JM 1-1 | 1 | - | 1 | - | 0 |
| தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | JM 1-1 | 1 | - | 1 | - | 0 |
| பராமரிப்பு உத்தியோகத்தர் | JM 1-1 | 1 | - | 0 | - | 1 |
| கொள்வனவு உத்தியோகத்தர் / சந்தைப். உத்தியோகத்தர் | JM 1-1 | 1 | - | 1 | - | 0 |
| பெறுகை உத்தியோகத்தர் | JM 1-1 | 1 | - | 0 | - | 1 |
| பாதுகாப்பு முகாமையாளர் | JM 1-1 | 1 | - | 0 | - | 1 |
| விளையாட்டு முகாமையாளர் (உள்ளக) | JM 1-1 | 1 | - | 1 | - | 0 |
| விளையாட்டு முகாமையாளர் | JM 1-1<br>JM 1-1 | 1 | - | 1 | - | 0 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (திறந்தவெளி) | | | | | | |
| விளையாட்டு முகாமையாளர் (போகம்பர) | JM 1-1 | 1 | - | 1 | - | 0 |
| விளையாட்டு முகாமையாளர் (பெலியத்தை) | | 1 | - | 1 | - | 0 |
| **முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்)** | | | | | | |
| தொழில்நுட்ப உதவி. (சவில்) | MA 2-1 | 2 | - | 0 | - | 2 |
| தொழில்நுட்ப உதவி. (மின்) | MA 2-1 | 2 | - | 1 | - | 1 |
| களஞ்சிய பொறுப்பாளர் | MA 2-1 | 3 | - | 2 | - | 1 |
| புத்தகம் பேனுனர் | MA 2-1 | 1 | - | 1 | - | 0 |
| தொழில்நுட்ப உதவியாளர் (தொழில்நுட்ப / மோட்டார்) | MA 2-1 | 1 | - | 0 | - | 1 |
| தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | | 2 | - | 0 | - | 2 |
| **முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமல்லாத)** | | | | | | |
| முகாமைத்துவ உதவியாளர் | MA 1-1 | 32 | - | 28 | - | 4 |
| தள நிருவாகி | MA 1-1 | 1 | - | 1 | - | 0 |
| பணி பரிசோதகர் | MA 1-1 | 2 | - | 1 | - | 1 |
| விளையாட்டு உத்தியோகத்தர் | MA 1-1 | 8 | - | 6 | - | 2 |
| விளையாட்டு பயிற்றுவிப்.** | MA 1-1 | 1 | - | 1 | - | 0 |
| பிரதான பாதுகாப்பு உத்தி. | MA 1-1 | 3 | - | 2 | - | 1 |
| பாதுகாப்பு உத்தியோகத்தர் | MA 1-1 | 18 | - | 18 | - | 0 |
| பூங்காவன அலங்கார உதவி. | MA 1-2 | 1 | - | 0 | - | 1 |
| **ஆரம்ப தேர்ச்சி** | | | | | | |
| மின் தொழில்நுட்பம் ** | PL 3 | 1 | - | 1 | - | 0 |
| | PL 3 | 4 | - | 0 | - | 4 |
| சாரதி | | 10 | - | 9 | - | 1 |
| **ஆரம்ப பகுதியளவு தோச்சி** | | | | | | |
| தச்சு தொழில்நுட்பம் | | 3 | - | 3 | - | 0 |
| மேசன் | | 3 | - | 3 | - | 0 |
| பொருத்துனர் | | 3 | - | 3 | - | 0 |
| வர்ணம் பூசுனர் | | 3 | - | 3 | - | 0 |
| இரும்பு பொருத்துனர் | PL 2 | 3 | - | 2 | - | 1 |
| துவிச்சக்கர வண்டி செய்தியாளர் | | 2 | - | 1 | - | 1 |
| உயிர்காப்பு உதவியாளர் | | 4 | - | 0 | - | 4 |
| மசாஜ் செய்பவர் | | 2 | - | 0 | - | 2 |
| சமயலாளர் | | 1 | - | 0 | - | 1 |
| **ஆரம்ப தேர்ச்சியற்ற** | | | | | | |
| விளையாட்டு மைதா. உதவியாளா | | 111 | - | 101 | - | 10 |
| பாதுகாப்பு மேற்பார்வையாளர் | PL 1 | 100 | - | 87 | - | 13 |
| அலுவலக உதவியாளர் | | 10 | - | 9 | - | 1 |
| நீச்சல் தடாக உதவியாளர் | | 5 | - | 0 | - | 5 |
| பங்களா பொறுப்பாளர் | | 1 | - | 0 | - | 1 |
| விளையாயட்டுத்திடல் எழுதுவி. ** | | 13 | - | 13 | - | 0 |
| | **மொத்தம்** | **378** | **1** | **310** | **1** | **68** |

(**) இப் பதவி வகிப்பவருக்கு மாத்திரம் தனிப்பட்ட ரிதியலான பதவியை அங்கீரிக்கும் போது ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதிக்கு அமைய தகமைகள் அங்கீரிக்கப்பட்டுள்ளன.

**அதிகார சபையின் நோக்கம்**

- சுகததாச தேசிய விளையாட்டு கட்டத்தொகுதி அதிகார சபையினை முகாமைத்துவத்திற்கு உட்படுத்தல், பராமரித்தல், பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.
- விளையாட்டுப் பொருளாதாரம் மற்றும் விளையாட்டு சுற்றுலா வர்த்தகத்தின் தேவையினை நிவாத்தி செய்வதற்காக தேசிய விளையாட்டுக் கட்டத் தொகுதியின் விளையாட்டு மற்றும் களியாட்ட செயற்பாடுகள் மற்றும் வசதிகளை விருத்தி செய்தல்.
- விளையாட்டுப் பொருளாதாரத்தின் மற்றும் விளையாட்டு சுற்றுலா வர்த்தகத்தின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டத் தொகுதியின் விளையாட்டு மற்றும் களியாட்ட செயற்பாடுகள் உட்பட வசதிகளை விருத்தி செய்தல்.
- நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக சுகததாச விளையாடடுக் கட்டத் தொகுதியிற்கு அவசியாமாக காணப்படும் வசதிகளை வழங்குதல்.
- சமூக ஒருங்கினைப்பு மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு உதவக் கூடிய முறையாக விளையாட்டு மற்றும் களியாட்ட செயற்பாடுகளைப் பயன்படுத்துவதனை உறுதிப்படுத்தல்.

**அதிகார சபையின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள்**
**பொறுப்புக்கள்**

- முகாமைத்துவத்திற்கு உட்படுத்தல், பராமரிப்புக்களை மேற்கொள்ளல், மற்றும் தேசிய சொத்தாக சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டத் தொகுதி அதிகார சபையை பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- அனைத்து வசதிகள் மற்றும் சேவைப் பராமரிப்புக்களை முன்னெடுத்தல்.
- கட்டங்களுக்கு மற்றும் கட்டமைப்புக்களுக்குத் தேவையான அபிவிருத்திகளை மேற்கொள்ளல் மற்றும் மாற்றங்களை மேற்கொள்ளல்.
- இலங்கைப் பிரஜைகளுக்கு மற்றும் விஷேடமாக இலங்கையின் இளைஞர் யுவதிகளுக்கு விளையாட்டின் சுய இயலுமைகளை விருத்தி செய்ய மற்றும் அவர்களின் உடற்பயிற்சி உட்பட சுகாதாரத்தை விருத்தி செய்யக் கூடிய வகையில் பணிப்பாளர் சபையினால் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வசதிகளை அவர்களுக்கு வழங்குதல்.
- விஷேடமாக கிராமிய மட்டங்களில் விளையாட்டுத்துறையினை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் விளையாட்டு தொடர்பான பயிற்சி பாடநெறிகள் மற்றும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல்.
- தேசிய மற்றும் சர்வதேச விழாக்களுக்காக தேவையான வசதிகளை முகாமைத்துவ சபையினால் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்குதல்.
- இலங்கையில் விளையாட்டு மற்றும் களியாட்ட வசதிகளை விருத்தி செய்யும் நோக்குடன் சர்வதேச மற்றும் உள்நாட்டு விளையாட்டு பயிற்சி அமைப்புக்கள், விளையாட்டு நிறுவனங்களுடனான இணைப்புக்கள் மற்றும் தொடர்பாடல்களை ஏற்படுத்திக் கொள்ளல்.
- எமது அதிகார சபையின் வசதிகள் முகாமைத்தவ சபையினால் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நியாயமான கட்டணத்திற்கு பாடசாலைகளுக்கு, இளைஞர் விளையாட்டுக் கழகங்களுக்கு மற்றும் விளையாட்டு அமைப்புக்களுக்கு வழங்குதல்.

**பணிகள்**

- மேற்கூறப்பட்ட பொறுப்பினை நிறைவேற்றுவதற்கு எமது அதிகார சபையினால் கீழ் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் தேசிய விளையாட்டு சங்கங்கள், பாடசலை விளையாட்டு சங்கங்கள், மற்றும் அரசாங்கத்தைப் போன்று தனியார் நிறுவனங்களுக்காகவும் முகாமைத்துவ சபையினால் அங்கீரிக்கப்பட்ட கட்டணத்தின் கீழ் சேவைகள் மற்றும் வசதிகள் வழங்கப்படுகின்றன.
- தேசிய மற்றும் சர்வதேச மெய்வல்லுநர் போட்டிகளுக்காக விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளுக்காக பயிற்சியளிப்பதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.
- சர்வதேச மட்டத்திலான போட்டிகள் பகல் நேரத்தைப் போன்று இரவு நேரத்திலும் நடாத்துவதற்கு தேவையான வசதிகளை வசதிகளை வழங்குதல்.
- குறைந்த வசதிகள் கொண்ட பாடசாலைகள் மற்றும் கிராமிய மட்டத்தில் காணப்படும் திறமைமிக்க விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலம் அவர்களின் திறமைகளை விருத்தி செய்து முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான வசதிகளை வழங்குதல்.
- தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான நீச்சல் போட்டிகளை நடாத்துவதற்குத் தேவயைான நீச்சல் மற்றும் சுழியோடும் தடாக வசதிகளை வழங்குதல்.
- பரீட்சைகள், கருத்தரங்குகள், மாநாடுகள் மற்றும் விழாக்கள், களியாட்ட நிகழ்வுகளுக்காக தேவையான வசதிகளை வழங்குதல்.
- பயிற்சிகள் செயலமர்வுகளை ஒழுங்கு செய்தல்.

**வசதிகள் மற்றும் சேவைகளை வழங்கும் துறைகள்**

சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டத் தொகுதி அதிகார சபையின் சேவை பெறுனர்களின் தேவைகளுக்கு ஏற்றவாறு விளையாட்டு வசதிகளை வழங்குதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் விரிவான துறைசார் சேவை வசதிகளை வழங்குவதற்கு விளையாட்டுத் திடல் மற்றும் விளையாட்டு மைதானத்தை தேவையானவாறு அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

உள்ளக விளையாட்டுத் திடல், திறந்தவெளி விளையாட்டு மைதானம் மற்றும் போகம்பர விளையாட்டு மைாதானம்  ஆகிய விளையாட்டு மைதானங்களில் நடாத்தப்படும் விளையாட்டு நிகழ்வுகளைப் போன்று ஏனைய வேலைத்திட்டங்களை நடாத்துவதற்காக பகல் நேரத்தைப் போன்று இரவு நேரங்களிலும் சேவை வசதிகளை உயர்ந்த தரத்துடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. பாடசாலை மட்டம் தொடக்கம் மாவட்டப் போட்டிகள், மாகாண மட்டத்திலான போட்டிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கை விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளின் விளையாட்டு நிகழ்ச்சிகள் சர்வதேச மட்டம் வரை செல்வதற்குத் தேவையான சேவைகள் மற்றும் வசதிகளை ஏற்படுத்தியுள்ள ஓரேயொரு நிறுவனம் சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டத் தொகுதி அதிகார சபையாகும்.

**உள்ளக மற்றும் தறிந்தவெளி விளையாட்டுக்கள்**

மெய்வல்லுனார் விளையாட்டு, றகர் / காற்பந்து. வலைப்பந்து, கிரிகட், கூடைப்பந்து, ஸ்கொஸ், கைப்பந்து, பட்மின்டன், மேசைப்பந்து, ஜுடோ, மல்யுத்தம், வுசூ, குத்துச்சண்டை, டைகொண்டோ, கராத்தே, ஜிம்னாஸ்டிக், நீச்சல் விளையாட்டு என்ற அடிப்படையில் விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதற்காக சா்வதேச மட்டத்திலான வசதிகளை வழங்குதல்.



**சுகாதராரம் மற்றும் கல்வி**

சமய நிகழ்ச்சிகள், தேசிய மற்றும் சா்வதேச விழாக்கள், செயலமா்வுகள், நீச்சல் பாடசாலை மற்றும் பயிற்சிப் பாடநெறி, உயிா்காப்பு பாடநெறி, உடற்பயிற்சி பாடநெறி, கண்காட்சி, கூட்டங்களுக்காக சா்வதேச மட்டத்திலான சேவைகள் மற்றும் வசதிகளை வழங்குதல்.



**விஹஜ்ஜாவத வேலைத்திட்டம் - 2020**

**களியாட்ட நிகழ்வுகள்**

தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான பாரிய இசைக் கச்சேரிகள், நடனக் கலை நிகழ்ச்சிகளை நடாத்துதல் மற்றும் வருடாந்த ஒன்று கூடல்களுக்காக உயர் மட்டத்திலான சேவைகள் மற்றும் வசதிகளை வழங்குதல்.




**வர்த்தகப் பிரசாரங்கள் மற்றும் விளம்பரங்கள்**

சந்தைப்படுத்தலுக்கு உரியதாக அசையாத புகைப்படங்களை எடுத்தல் மற்றும் விடியோ ஒளிநாடாவிற்காக தேவையான பின்புலத்தை வழங்குவதன் மூலம் சேவை வசதிகள் வழங்கப்படுகின்றன. விளையாட்டுத் துறைக்கு உரிய விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளின் பங்கேற்புடன் வர்த்தக விளம்பரங்களை விளையாட்டு மைதான வளாகத்தில் படம் பிடித்தல்.

திரைப்படக் கலைஞர்களினால் அவர்களின் விளையாட்டுக்கள் தொடர்பிலான ஆக்கங்களின் போது விளையாட்டு வளாகத்தின் பின்புலத்தைப் பயன்படுத்துவதற்கு தேவையான வசதிகள் வழங்கப்படுகின்றன.

விளம்வரங்களை வெளியடல் மற்றும் பிரச்சால செயற்பாடுகளுக்கான பிரதான வீதிக்கு எதிரே பொருத்தப்பட்டுள்ள டிஜிடல் தொழில்நுட்பம் கெண்ட 20 x 20 அளவினைக் கொண்ட LED விளம்பரப் பலகை திறந்தவெளி விளையாட்டு மைதானத்தில் பொருத்தப்பட்டுள்ளது.



**பிரதான நிருவாகக் கட்டம்**

மேற்கூறப்பட்ட சேவைகள் மற்றும் வசதிகளை வழங்குவதற்காக சுகததாச தேசிய விளையாட்டு கட்டத்தொகுதி அதிகார சபை கீழ் குறிப்பிடப்பட்ட இணை நிறுவனங்களை கொண்டமைந்துள்ளது.

- சுகததாச உள்ளக விளையாட்டு மைதானம் மற்றும் நீச்சல் தடாக கட்டதொகுதி.
- சுகததாச விளையாட்டு ஹோட்டல்.
- சுகததாச திறந்தவெளி விளையாட்டு மைாதானம்.
- ஆர். பிரேமதாச சர்வதேச விளையாட்டு மைதானம்.
- போகம்பர திறந்தவெளி விளையாட்டு மைதானம்.
- பெலியத்த மற்றும் வீரகடிய நீச்சல் தடாகம்.
- நுவரெலிய குதிரைப்பந்தய விளையாட்டு மைதானம்.

**மானிட வள அபிவிருத்தி**

2020 நிதி ஆண்டுக்குள் ஊழியர்களின் ஊக்குவிப்பு மற்றும் திறமை விருத்தி தொடர்பில் பணியாளர் சபையினை ஈடுபடுத்தும் திட்டத்தினை அமுல்படுத்த முடியாத ஆண்டா காணப்பட்டது. இதற்கு அநேகமாக தாக்கம் செலுத்திய காரணமாக அமைந்தது மார்ச் மாதம் தொடக்கம் உலககளாவிய தெற்று நேயான கொவிட் 19 தொற்று நோய் பரவியமையாகும். பல மாதங்கள் நாட்டில் தனிமைப்படுத்தும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டமையினால் அலுவலக செயற்பாடுகளை வழமை போன்று நடாத்தி செல்வதற்கு தடைகள் ஏற்பட்டன. பல மாதங்களாக வீட்டில் இருந்து கொண்ட கடமையினை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

எனவே திட்டமிடப்பட்ட பயிற்சி வேலைத்திட்டங்கள் செல்லுபடியற்றதாக காணப்பட்டதுடன், ஆண்டு இறுதியில் ஒன்லைன் (online) வேலைத்திட்டத்தினை நடாத்துவதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதற்கு அமைய பயிற்சி வேலைத்திட்டங்களை மிகக் குறைந்த மட்டத்தில் நடாத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

| வேலைத்திட்டங்கள் | பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | கால எல்லை | மொத்த முதலீடு (ரூபா. '000) | | வேலைத்திட்டங்களின் தன்மை (உள்நாடு/ வெளிநாடு) |
|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநா. | |
| பெறுகை செயற்பாடுகள் | 01 | 2020.09.24, 25 | 8,500.00 | - | உள்நாடு |
| அலுவலக முகாமைத்துவ மற்றும் நிதி ஒழுங்குக் கோவை | 02 | 2020.02.24, 25 | 8,000.00 | - | உள்நாடு |
| Building Automation Systems | 01 | 2020.02.09 | 28,000.00 | - | உள்நாடு |
| ஆவணக்கோவை | 50 | 2020.08.14 | 70,000.00 | - | உள்நாடு |
| வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை | 81 | 2020-08- 18 தொடக்கம் 2020-12-10 வரை | 513,925.00 | - | உளநாடு |








**பணியாளர் சபைக்காக சுகததாச விளையாட்டு ஹோட்டலில் நடாத்தப்பட்ட ஆவணக்கோவை பயிற்சி வேலைத்திட்டம் - 2020**

**முகாமைத்துவ அறிக்கைப்படுத்தல்.**

நிறுவனத்தின் மாதாந்த முன்னேற்றங்கள் விளையாட்டுத்துறை அமைச்சிற்கு அறிக்கைப்படுத்தும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதாந்தம் மேற்கொள்ளப்படுவதுடன், மூன்றாது காலாண்டு இறுதியில் பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்படும் செயற்சாதனை அறிக்கையினை உரியவாறு சமர்ப்பிப்பதற்கும், முகாமைத்துவ சேவைத் திணைக்களம், வரவு செலவுத் திட்ட திணைக்களம், குடிசன புள்ளிவிபரவியல் திணைக்களம் ஆகிய நிறுவனங்களுக்கு புள்ளிவிபவியல் தகவல்களை சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**முகாமைத்துவ சபைக் கூட்டம் - 2020**

இவ் அதிகார சபையின் முன்னேற்றத்திற்கு உரியதான கொள்கை அடிப்படையில் தீர்மானம் எடுக்கும் பணிகள் முகாமைத்துவ சபையினால் மேற்கொள்ளப்படுவதுடன், அதற்கு உரியதான கூட்டம் மாதந்தம் தோரும் நடைபெறுகின்றது. 2020 ஆண்டிற்கு உரியதாக பெபப்ரவரி தொடக்கம் டிசம்பர் வரை முகாமைத்துவ சபையினால் 07 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

**அதிகார சபையின் கணக்காய்வுப் பணிகள்**

2020 கணக்காய்வு ஆண்டிற்காக கணக்காய்வு செயற்பாடுகள் 13 நடாத்தப்பட்டுள்ளதுடன், கணக்காய்வு குழு அவ் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தை 01 தடவை நடாத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைய,

- உள்ளக கணக்காய்விற்காக 2020 ஆம் ஆண்டிற்குரியதான பதில் வழங்கப்பட்டுள்ளதுடன், அவை அமுல்படுத்பதப்பட்டுள்ளன.

- விளையாட்டுத்துறை அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் 03 தடவைகளுக்காக இவ் அதிகார சபையின் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் பங்கேற்றுள்ளனர்.

**பொருள் ஆய்வு - 2020**

சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டத்தொகுதி அதிகார சபையின் 2020 ஆம் ஆண்டிற்குரியதாக பொருள் ஆய்விற்காக 2019.12.12 ஆம் 14 துணைக்குழுக்களை உள்ளடக்கி பொருள் ஆய்வுக் குழு நியமிக்கப்பட்டது. அரசாங்கத்தின் நிதி ஒழுங்குக் கோவை 756, 757 இற்கமைய ஆய்வு செயற்பாடுகள் பூர்த்த செய்யப்பட்டுள்ளன.

**வருடாந்த பெறுகை செயற்பாடுகள்**

2020 நிதி ஆண்டிற்குள் அதிகார சபையின் செயற்பாடுகளுக்குாக உள்ளக விளையாட்டுத்திடல், திறந்தவெளி விளையாட்டு மைதானம், பேகம்பர விளையாட்டு மைதானம் மற்றும் பெலியத்தை விளையாட்டு மைதானத்தைப் போன்று நுவரெலிய குதிரைப்பந்தய விளையாட்டு மைதானத்திற்காக மேற்கொள்ளப்பட்ட பெறுகைச் செயற்பாடுககள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

| தொ. இல. | பெறுகை | நிதி (ரூபா) |
|---|---|---|
| 1 | சுகததாச அதிகார சபைக்கான "Risograph" இயந்திரத்தின் கொள்வனவு | 508,000.00 |
| 2 | நீச்சல் தடாக வளாகத்திற்கான 90% குளோரின் கொள்வனவு | 1,309,000.00 |
| 3 | 2020 ஆம் ஆண்டிற்கான காகிதாதிகளின் கொள்வனவு | 1,165,127,10 |
| 4 | போகம்பறை விளையாட்டு மைதானத்தின் 2020 ம் ஆண்டிற்கான துப்புரவு சேவைக்கான ஒப்பந்தம் | 4,839,840.00 |
| 5 | 2020 – 2021 ஆம் ஆண்டு வரை நீச்சல் தடாக வளாகத்திற்கான இரசாயன பொருட்களின் கொள்வனவு | 3,144,000.00 |

**சுகததாச உள்ளக விளையாட்டுத்திடல்**

சுகததாச உள்நாட்டு விளையாட்டு மைதானம் கீழ் குறிப்பிடப்பட்ட பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளது.

- துணை விளையாட்டுத்திடல் (பூப்பந்து, ஸ்கொஸ் மற்றும் மேசைப் பந்து)
- நீச்சல் தடாக கட்டத்தொகுதி
- உடற்பயிற்சி மத்திய நிலையம்
- விளையாட்டு ஹோட்டல்.

**உள்ளக விளையாடடுத் திடல்**



உள்ளக விளையாட்டத்திடலிற்காக 5004 ஆசனங்களைக் கொண்ட குளிரூட்டப்பட்ட பார்வையாளர் அரங்கு காணப்படுதுடன், இதன் உள்ளக விளையாட்டுத் திடலின் அகலம் 35 மீற்றர் மற்றும் நீளம் 40 மீற்றர் கொண்டதாகும். இவ் வேலைத்திட்டத்தில் தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் கூடைப்பந்து, பட்மின்டன் வலைப்பந்து, ஜுடோ, ஜிம்நாஸ்டிக், காற்பந்து, மேசைப் பந்து. குத்துச் சண்டை, கராதே, மல்யுத்தம் போன்ற உள்ளக விளையாட்டுப் போட்டியை நடாத்துவதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக பல்வேறுபட்ட விழாக்கள், சமமேளனங்கள், இசைக் கச்சேரிகள், அரச விழாக்கள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துவதற்காக வசதிகள் வழங்கப்படுகின்றன.

2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 வரை உள்ளக விளையாட்டுத்திடலில் நடாத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஏனைய விழாக்கள் மூலம் ரூபா 9,922,127,00 வருடாந்த வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டின் டிசம்பர் 31 வரை உள்ளக விளையாட்டுத்திடலில் நடாத்தப்பட்ட போட்டித் தொடர்கள் மற்றும் ஏனைய விழாக்கள் தொடர்பான சுருக்கம் கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

| தொ.இல. | செயற்பாடுகள் | சர்வதேச | தேசிய | மொத்தம் |
|---|---|---|---|---|
| 01 | கராதே போட்டி | - | 05 | 05 |
| 02 | வலைப்பந்துப் போட்டி | - | 01 | 01 |
| 03 | பட்மின்டன் போட்டி | - | 01 | 01 |
| 04 | குத்துச்சண்டைப் போட்டி | - | 01 | 01 |
| 05 | சிறுவர் செயற்பாடுகள் | - | 02 | 02 |
| 06 | சம்மேளனம், பரிசில் விழா | - | 01 | 01 |
| 07 | சமயப் போதனை | - | 01 | 01 |
| 08 | பயிற்றுவிப்பு | - | 18 | 18 |
| 09 | வீடியோ ஒளிப்பதிவு | - | 01 | 01 |
| 10 | வர்த்தக கூடம் | - | 21 | 21 |
| | மொத்தம் | **-** | **61** | **61** |

**துணை விளையாட்டுத்திடல்.**



இவ் துணை விளையாட்டுத் திடலில் பட்மின்டன் விளையாட்டு மைதானங்கள் இரண்டு, நான்கு ஸ்கொஸ் விளையாட்டு மைாானங்கள் அடங்குவதுடன், விளையாட்டுப் போட்டி மற்றும் பயிற்றுவிப்பு செயற்பாடுகளுக்காக வசதிகளை வழங்க அமைக்கப்பட்டுள்ளது.

**நீச்சல் தடாக கட்டத்தொகுதி**

இலங்கையில் அமைந்துள்ள சர்வதேச மட்டத்திலான வசதிகள் கொண்ட ஒரேயொரு நீக்சல் தடாக கட்டத் தொகுதி அதிகார சபையில் காணப்படுகின்றது. இதன் உள்நாட்டு மற்றும் சர்வதேச பாடசாலைகள் உட்பட விளையாட்டு சங்கங்கள் மூலம் திட்டமிடப்பட்ட நீச்சல் பயிற்சி செயற்பாடுகளைப் போன்று நீச்சல் போட்டித் தொடர்கள் / கண்காட்சி வேலைத்திட்டங்களை நடாத்துவதற்காக ஒதுக்கப்படுகின்றது. இதற்கு அமைய நீச்சல் தடாக கட்டத்தொகுதியில் இரவு நேரத்தில் நடைபெறும் போட்டிகளுக்காக ஒளி வசதிகளை வழங்குவதற்காக அதிசக்தி மின்விளக்கிற்காக அதி சக்திவாய்ந்த மின் ஒளி கோபுரங்களைக் கொண்ட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ள இலங்கையின் ஒரேயொரு நீச்சல் தடாக கட்டத்தொகுதியாக சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டத்தொகுதி அதிகாரசபையினை அறிமுகப்படுத்த முடியும்.

அதிகார சபையினால் நீச்சல் தடாகத்தின் பயிற்றுவிப்பாளர்களை பயன்படுத்தி பாடசாலை மாணவர்களுக்காக பிள்ளைகளை சேர்த்துக் கொண்டு நீச்சல் பயிற்சி செயற்பாடுகளில் ஈடுபடுத்தும் செயற்பாடுகள் நீண்ட காலம் தொடக்கம் முன்னெடுக்கப்படுவதாக குறிப்பிட வேண்டும். இது தொடர்பான அங்கத்துவம் அனுமதி மாதாந்தம் / 03 மாதங்கள் / 06 மாதங்கள் மற்றும் வருடாந்த அடிப்படையில் வழங்கப்படுகின்றது.

.

அத்துடன் பார்வையாளர்களின் வசதியிற்காக இவ் ஆண்டில் பார்வையாளர் அரங்கினைத் தழுவக் கூடிய வகையில் கூறையினை நிர்மாணித்தல் மற்றும் அதில் உள்ள பைபர் புணரமைப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.




பிரதான நீச்சல் தடாகம் ( 50 மீற்றர் நீளம் / 20 மீற்றர் அகலம் / 02மீற்றர் அகலம் )



பயிற்சிக்கான துணை நீச்சல் தடாகம்



சுழியோடும் தடாகம்



சிறுவர் நீச்சல் தடாகம்

2020 ஆம் ஆண்டில் டிசம்பர் 31 வரை நீச்சல் தடாகங்களில் இடம்பெற்ற போட்டிகள் / போட்டித் தொடர்கள் / பயிற்றுவிப்பு அங்கத்துவம் தொடர்பான சுருக்கம் கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

| | |
|---|---|
| பாடசாலை மாணவர்களுக்கான நீச்சல் அங்கத்துவம் | **299** |
| முதியோருக்கான நீச்சல் அங்கத்துவம் | **91** |
| நீச்சல் சுழியோடுதல் மற்றும் நீர் பந்து போட்டி | **05** |
| பயிற்றுவிப்பு | **103** |
| **மொத்தம்** | **498** |

மேற்கூறப்பட்ட போட்டி / பேட்டித்தொடர் / பயிற்றுவிப்பு அங்கத்துவத்தை வழங்குவதன் மூலம் நீச்சல் தடாகங்களில் ரூபா 2,630,078.00 வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

**உடற்பயிற்சி மத்திய நிலையம்**

இம் மத்திய நிலையத்தின் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளைப் போன்று ஏனைய சேவை பெறுனர்களுக்கும் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண்டு தேவையான பயிற்சிகளில் ஈடுபட முடியும்.

2020 ஆம் ஆண்டில் ' சம்பர் 31 வரை உடற்பயிற்சி மத்திய நிலையத்தின் மூலம் ரூபா 1,375,259.00 வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.




**உள்ளக விளையாட்டு திடலில் உடற்பயிற்சி மத்திய நிலையம்**

**விளையாட்டு ஹோட்டல்**

.



இவ் அதிகார சபையில் சேவை வசதிகளைப் பொற்றுக் கொள்வற்காக வருகை தரும் விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளுக்கு தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக தாபிக்கப்பட்டுள்ள விளையாட்டு ஹோட்டல் நவீனமயப்படுத்தியதன் பின்னர் சமகாலப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது..



இவ் விளையாட்டு ஹோட்டல் சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத் தொகுதி அதிகார சபையின் கீழ் நிருவகிக்கப்படுகின்றதுடன் இங்கு தங்குமிட வசதிகளுக்காக 42 அறைகளைக் கொண்ட இரு மாடிக் கட்டிடம் தாபிக்கப்பட்டுள்ளது. இங்கு 150 அங்கத்தவர்களுக்கு மேற்பட்டோருக்கு ஒரே தடவையில் தங்குமிட வசதிகள் காணப்படுகின்றன. இங்கு தங்குமிட வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு மேலதிகமாக விழாக்கள், களியாட்ட

நிகழ்வுகள், கூட்டங்கள், மற்றும் செயலமர்வுகளை நடாத்துவதற்காக வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன

இவ் ஹோட்டலை தொடர்ந்தும் அபிவிருத்தி செய்யும் செயற்பாடாக 2020 ஆம் ஆண்டில் குளிரூட்டல் தொகுதி மற்றும் தீயணைக்கும் உபகரணத் தொகுதியும் தாபிக்கப்பட்டுள்ளது.

**உள்ளக விளையாட்டுத்திடல் சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றங்கள் - 2020.12.31 ஆம் திகதியன்று**

| தொ. இல. | பணிகள் | மதிப்பீட்டுப் பெறுமதி (ரூபா.மி) | 2020 ஆம் ஆண்டிற்கான (ரூபா.மி.) | | பௌதீக முன்னேற்றங்கள் |
|---|---|---|---|---|---|
| | | | **ஒதுக்கீடு** | **செலவினம்** | |
| **01** | சுகததாச உள்ளக விளையாட்டு மைதானத்தின் பிரதான நுழை வாயில் புணரமைப்பு | | 6.0 | 1.47 | 99% |
| **02** | சுகததாச விளையாட்டு ஹோட்டலின் குளிரூட்டல் தொகுதியினைத் தாபித்தல். | | 4.0 | 2.49 | 99% |
| **03** | சுகததாச விளையாட்டு ஹோட்டலின் தீயணைக்கும் தொகுதியினை தாபித்தல். | | 8.0 | 0.65 | 99% |
| **04** | உள்ளக விளையாட்டுத் திடலிற்கு வர்ணம் பூசுதல் மற்றும் புணரமைப்பு செயற்பாடுகள் | | 17.0 | 9.90 | 99% |
| **05** | சுகததாச நீச்சல் தடாகத்தின் சபை கூறையினை பொருத்துதல் மற்றும் பைபர் கதிரையினை புணரமைத்தல் | | 26.0 | 13.27 | 95% |
| **06** | உள்ளக விளையாட்டுத்திடலின் நீச்சல் தடாக வளாகத்தின் அறை மற்றும் மலசலகூடத் தொகுதியினை புணமைத்தல். | | 41.0 | 4.96 | 75% |
| **07** | உள்ளக விளையாட்டுத் திடலின் உப விளையாட்டு மைதானத்தின் மரத்திலான தரையினை புணரமைத்தல். | | 17.0 | 9.80 | 90% |

**உள்ளக் விளையாட்டுத்திடலின் 2021 ஆண்டிற்கான உத்தேச அபிவிருத்தி செயற்திட்டங்கள்**

| தொ.இல. | பணிகள் | வரவு செலவு ஒதுக்கீடு (ரூபா.மி.) |
|---|---|---|
| 1 | நீச்சல் தடாக கட்டத்தின் பமிபியினை நவீனமயப்படுத்தல். | 78.0 |
| 2 | நீச்சல் தடாக கட்டத்தொகுதியினை இலத்திரணியல் நேரக் கணிப்பீட்டு இயந்திரத்தினைப் பொருத்துதல். | 78.0 |
| 3 | நீச்சல் தடாகத்தின் திறந்தவெளி ஆசனத்தை பராமரித்தல். | 28.0 |

**சுகததாச திறந்தவெளி விளையாட்டு மைதானம்**

இலங்கை பாடசாலை விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளுக்காக மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியினை நடாத்துவதற்கு சர்வதேச மட்டத்திலான வசதிகள் கொண்ட அமைக்கப்பட்டுள்ள ஒரேயொர விளையாட்டு மைதானமாகும். பகல் மற்றும் இரவு நேரங்களில் மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் காற்பந்து / றக்பி பயிற்சியில் ஈடுபடுதல் மற்றும் போட்டியினை ஒரே தடவையில் நடாத்த முடியுமான முறைக்கு இவ் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டுள்ளது. இவ் விளையாட்டு மைதானத்தில் ஒரே தடவையில் 20,000 பார்வையாளர்களுக்கு போட்டியினை பார்வையிடக் கூடியவகையில் விளைளயாட்டுத் திடலில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.



திறந்தவெளி விளையாட்டு மைதானத்தின் 400 மீற்றர் மற்றும் 200 மீற்றர் கெண்ட செயற்கை ஓடுபாதை 02 அமைக்கப்பட்டுள்ளது. இச் செயற்கை ஓடுபாதைகள் ஐந்தாவது தடவையாக நவீனமயப்படுத்தும் செயற்பாடுகள் இவ் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டன. இதற்கு மேலதிகமாக மூன்று மாடிகளைக் கொண்ட ஊடாக பிரிவு, அதி சக்திவாய்ந்த மின் ஒளி தொகுதியின் இரவு நேரப் போட்டிகளை நடாத்துவதற்கு தேவையான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ் விளையாட்டு மைதானத்தில் மெய்வல்லுநர் விளையாட்டு, கரப்பந்த, றக்கர், காற்பந்து, கூடைப்பந்து விளையாட்டுக்களைப் போன்று பல்வேறுபட்ட விழாக்களுக்காவும் வசதிகள் வழங்கப்படுகின்றன.

2020 ஆம் ஆண்டில் டிசம்பர் 31 வரை இவ் விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்பட்ட போட்டிகள் மற்றும் விழாக்கள் தொடர்பான தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன..

| தொ.இ. | செயற்பாடுகள் | தேசிய | சர்வதேச | மொத்தம் |
|---|---|---|---|---|
| 01 | காற்பந்து போட்டி | 29 | - | 29 |
| 02 | விளையாட்டு விழா (400 மீற்றர் ஓடுபாதை) | 27 | - | 27 |

| | | | | |
|---|---|---|---|---|
| | விளையாட்டு விழா (200 மீற்றர் ஓடுபாதை) | 26 | - | 26 |
| 03 | மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி | 05 | - | 05 |
| 04 | வீடியோ ஒளிப்பதிவு செய்தல் | 03 | - | 03 |
| 05 | பயிற்சி / தெரிவுப் போட்டி / ஆரம்ப பயிற்சி | 24 | - | 24 |
| 06 | உடற்பயிற்சிக்காக நடக்கும் அங்கத்துவம் | 42 | - | 42 |
| 07 | வலைப்பந்துப் பயிற்சி | 99 | - | 99 |
| 08 | கரையோர கைப்பந்துப் போட்டி | 02 | - | 02 |
| 09 | ஏனையவை | 03 | - | 03 |
| | **மொத்தம்** | **260** | **-** | **260** |

2020 ஆம் ஆண்டின் டிசம்பர் 31 வரை சுகததாச திறந்தவெளி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற போட்டிகள், விழாக்கள், டி வாகனத் தரிப்பிடம், குத்தகைக் கூலி மற்றும் ஏனைய வகைகள் மூலம் ரூபா 21,462,175.00 வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

**2020.12.31 ஆம் திகதியன்று திறந்தவெளி விளையாட்டு மைதானம் சார்ந்த அபிவிருத்தித் திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றங்கள்.**

| | பணிகள் | மதிப்பீட்டுப் பெறுமதி (ரூபா.மில்) | 2020 ஆம் ஆண்டிற்காக (ரூபா.மி.) | | பௌதீக முன்னேற்றங்கள் |
|---|---|---|---|---|---|
| | | | **ஒதுக்கீடு** | **செலவினம்** | |
| **01** | தலைவரின் பங்களா புணரமைப்பு - இறுதிக் கட்டம் | | 16.0 | 4.38 | 98% |
| **02** | 200 மீற்றர் திறந்தவெளி விளையாட்டு மைதானத்தின் விளையாட்டு மண்டப புணரமைப்பு | | 11.0 | | 99% |
| **03** | டி வாகனத் தரிப்பிடத்தை புணரமைத்தல் - எஞ்சிய பணிகள் | | 14.5 | 5.23 | 95% |
| **04** | திறந்தவெளி விளையாட்டு மைதானத்தின் எல்லை வேலி சர்வதேச விளையாட்டு மைதான தரத்திற்கு அமைய புணரமைத்தல்.. | | | | |
| | (a) திறந்தவெளி விளையாட்டு மைதானத்தின் எல்லை வேலி நிர்மாணிப்பு | | 18.0 | 5.29 | 88% |

| | | | | |
|---|---|---|---|---|
| | (b) திறந்தவெளி விளையாட்டு மைதானத்தின் இரும்பு வேலி, பிரதான நுழைவாயில் மற்றும் அதனை அண்மித்த நிர்மாணிப்புக்கள். | 64.0 | 14.9 | 65% |
| | (உ) திறந்தவெளி விளையாட்டு மைதானத்தின் எல்லை வேலி நிர்மாணிப்பு. | 54.0 | 5.0 | 45% |
| 05 | ஊழியர் தங்குமிட நிர்மாணிப்பு - இரண்டாம் கட்டம் | 22.5 | 5.31 | 96% |

**சுகததாச விளையாட்டு மைதானத்தின் 2021 ஆண்டிற்கான உத்தேச அபிவிருத்தி செயற்திட்டங்கள்**

| தொ.இ. | பணிகள் | வரவு செலவு ஒதுக்கீடு (ரூபா.மி.) |
|---|---|---|
| 1 | திறந்தவெளி விளையாட்டு மைதானத்தின் ஒடுபாதைக்காக கால கணிப்பீட்டு இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்தல், பொருத்தல் மற்றும் முன்னெடுத்தல். | 186.0 |
| 2 | விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்தல் | 68.0 |
| 3 | 400 மீற்றர் ஒடுபாதையின் பராமரிப்பு செயற்பாடுகள் | 20.0 |
| 4 | ஒளி விளக்கு தொகுதியினை பொருத்துதல் | 30.0 |
| 5 | திறந்தவெளி விளையாட்டு மைதானத்தின் புணரமைப்பு செயற்பாடுகள் | 20.0 |

**இணைந்த நிறுவனங்கள் மற்றும் விளையாட்டு வளாக**
**போகம்பர திறந்தவெளி விளையாட்டு மைதானம்**



இவ் விளையாட்டு மைதானம் கண்டி நகர சபையினால் நிருவகிக்கப்பட்டதுடன், 2001 ஆம் ஆண்டு தொடக்கம் இவ் அதிகார சபைக்கு பௌதீக உரிமையினை பொறுப்பளித்ததன் பின்னர் நிருவாக செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக விளையாட்டு மைதான முகாமைத்துவம் உட்பட பணியாளர் சபையில் 70 இற்கு மேற்பட்டோர் சேவையில் ஈடுபடுத்தப்பட:டுள்ளனர்



திறந்தவெளி விளையாட்டடில் ஒரே தடவையில் 10,000 பேருக்கு மாத்திரம் போட்டியினை பார்வையிடக் கூடிய வகையில் விளையாட்டுத் திடலில் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இங்கு

மெய்வல்லுனர் விளையாட்டுக்கள், காற்பந்து, றகர், கரப்பந்து, வலைப்பந்து, பாடசாலை விளையாட்டு விழா மற்றும் ஏனைய விழாக்களுக்காக வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ் விளையாட்டு மைதனத்திற்காக புதிய உடற்பயிற்சி மத்திய நிலையத்தை நிர்மாணிப்பதற்காக நவீன உடற்பயிற்சி உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளைப் போன்று சேவை பெறுனர்களுக்கு இங்கு அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண்டு தேவையான வசதிகளைப் பெற்றுக் கொள்ள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2020 ஆம் ஆண்டில் டிசம்பர் 31 வரை இவ் விளையாட்டு மைதானத்தின் வாகனத் தரிப்பிடம் மற்றும் உடற்பயிற்சி மத்திய நிலையத்தின் ஊடாகவும் ஏனைய கிடைப்பனவுகள் மூலமும் ரூபா 6,466,002 வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

**போகம்பர திறந்தவெளி விளையாட்டு மைதானம் சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றங்கள் - 2020.12.31 ஆம் திகதியன்று**

| | பணிகள் | மதிப்பீட்டுப் பெறுமதி (ரூபா.மி.) | 2020 ஆம் ஆண்டிற்காக (ரூபா.மி) | | பௌதீக முன்னேற்றங்கள் |
|---|---|---|---|---|---|
| | | | **ஒதுக்கீடு** | **செலவினம்** | |
| **01** | போகம்பர விளையாட்டு மைதானத்தின் பிரதான நுழைவாயில் நிர்மாணிப்பு – கட்டம் 2 | | 6.0 | 1 | 99% |
| **02** | 400 மீற்றர் ஓடுபாதை நிர்மாணிப்பு | கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்றன | | | |
| **03** | காற்பந்து விளையாட்டு மைதானத்தை புணரமைத்தல். | | 22.0 | 13.96 | 99% |

**பேகம்பர திறந்தவெளி விளையாட்டு மைதானத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான உத்தேச அபிவிருத்தி செயற்திட்டங்கள்**

| தொ.இ. | பணிகள் | வரவு செலவு ஒதுக்கீடு (ரூபா.மி.) |
|---|---|---|
| **02** | 400 மீற்றர் ஓடுபாதை நிர்மாணிப்பு | 200.0 |




**போகம்பர உடற்பயிற்சி மத்திய நிலையம்**

**நுவரெலிய குதிரைப்பந்தய மைதானம்**

2011.09.07 ஆம் திகதி விளையாட்டுத் துறை அமைச்சினால் நுவரெலிய குதிரைப் பந்தய மைதானத்தின் முகாமைத்துவம் சுகததாச தேசிய விளையாட்டு கட்டத் தொகுதி அதிகார சபைக்கு பொறுப்பளிக்கப்பட்டது.




**குதிரைப்பந்தய போட்டி நிகழ்வு – நுவரெலிய குதிரைப் பந்தய விளையாட்டு மைதானம்**



இதன் நிலப்பரப்பு 34,564 ஹெக்டயர் என்பதுடன் இக் குதிரைப் பந்தய விளையாட்டு மைதானத்தின் மூலம் 2020 ஆம் ஆண்டில் டிசம்பர் 31 வரை குதிரை தங்குமிடங்களின், குத்தகைக் கூலி, குதிரை/ பெண் குதிரை மீது சவாரி செய்வதன் மூலம் பெற்ற வருமானம், வளாகத்தை வாடகைக்கு வழங்கப்பட்டதன் மூலம் மற்றும் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு வசதிகள் வழங்கப்பட்டதன் மூலம் வருமானமாக ரூபா 2,390,042.00ஐ ஈட்டப்பட்டுள்ளது.

வருடாந்தம் நடாத்தப்படும் வசந்த கால களியபட்ட நிகழ்வுகள் நாட்டில் மார்ச் மாதம் தொடக்கம் பரிவிய கொவிட் 19 வைரஸ் தொற்று காரணமாக சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட சுகாதார சட்ட ஒழுங்குகளுக்கு அமைய இவ் ஆண்டில் ஒழுங்கு செய்யப்படவில்லை. இதன் மூலம் அதிகார சபைக்கு வருடாந்தம் கிடைக்க வேண்டிய குறிப்பிடத்தக்களவு அளவு வருமானத்தை இழக்க வேண்டி நேரிட்டது.

## பெலியத்தை நீச்சல் தடாக கட்டத் தொகுதி

இந் நீச்சல் தடாக கட்டத் தொகுதி கீழ் குறிப்பிடப்பட்ட பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளது.

- 08 மருங்குகளைக் உள்ளடக்கிய 50 மீற்றர் நீளம் கொண்ட நீச்சல் தடாகம்.
- சுழியோடும் தடாகம்



பொலியத்த தொழில்நுட் கல்லூரி மற்றும் வீரகெடிய மாத்திரம் 2008-08-07 ஆம் திகதி தொடக்கம் சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டத்தொகுதி ராஜபக்ஷ மத்திய மஹா வித்தியாலய நீச்சல் தடாகங்களின் நிருவாக மற்றும் பராமரிப்புப் பணிகள் அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டமையும் இந் நீச்சல் தடாகங்களின் உரிமை சுகததாச தேசிய அதிகார சபையிற்கு உரியதல்ல. அண்மித்த பிரதேசங்களின் முதியோர் மற்றும் பாடசாலை மாணவிகளுக்கு நீச்சல் தடாக செயற்பாடுகளுக்காக வசதிகளை வழங்குவதற்கு தேவையான செயற்பாடுகள் மாணவ சுகததாச தேசிய விளையாட்டு கட்டத் தொகுதி அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது.

இந் நீச்சல் தடாகங்களின் மூலம் 2020 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதம் 31 வரை மொத்த வருமானம் ரூபா 446,770.00 ஆகும். இந் நீச்சல் தடாகங்கள் இரண்டு தொடர்பாக வயது வந்தோர், பாடசாலை மாணவ மாணவிகள் மற்றும் விளையாட்டுக் கழகங்களுக்காக அறிவுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் பங்கேற்பு மிகக் குறைந்த மட்டத்தில் இருந்தமையினால் உயரிய வருமானத்தை எதிர்பார்க்க முடியாது.



### ஆர் பிரேமதாச சர்வதேச விளையாட்டுக் கட்டத் தொகுதி

.



ஆர். பிரேமதாச கிரிகட் விளையாட்டு மைதானம் எமது நாட்டின் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கிரிகட் போட்டிகளை நடாத்துவதற்கு தேவையான வசதிகளைக் கொண்ட ஒரு விளையாட்டு மைதனமாகும். இங்கு ஒரே தடவையில் 35,000 ரசிகர்களுக்கு போட்டிகளைப் பார்வையிட வசதிகள் காணப்படுவதுடன், பாரிய வாகனத் தரிப்பிடத்தையும் கொண்டமைந்துள்ளது. இவ் விளையாட்டு மைதானம் 2006-05-10 ஆம் தகதி எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மாணத்திற்கு அமைய 2006-11-01 ஆம் திகதி தொடக்கம் முப்பது வருடகாலங்களுக்காக இலங்கை கிரிகட் நிருவகத்திற்கு மாதத்திற்கு ரூபா 250,000.00 நிதிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய 2020 ஆண்டில் டிசம்பர் 31 வரை இவ்விளையாட்டு மைதானத்தினால் ரூபா 2,750,000.00 வருமானம் ஈட்டப்பட்டுள்ளது

சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத் தொகுதி அதிகார சபையின் பிரதான வருமான மார்க்கமாக காணப்பட்ட இவ்விளையாட்டு மைதனம் நீண்டகாலமாக மாதாந்தம் மாற்றம் இன்றி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளமை அதிகாரசபையின் வருமானம் வீழ்ச்சியடைய காரணமாக அமைந்துள்ளது.

## கணக்கீட்டுக் கொள்கைகள்

### 1. பொதுவான விடயங்கள்

#### 1.1 ஒப்பீட்டு வெளிப்பாடுகள்

சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டத்தொகுதி அதிகார சபையின் நிதி வெளிப்பாடுகள், இலங்கை அரச துறை தொடர்பாக கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு அமைவானதாகும்.

#### 1.2 தயாரிக்கும் அடிப்படைகள்

கணக்குகள் தொடர்பான குறிப்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளவாறு நிதிய வெளிப்பாடுகள் தயாரிக்கப்பட்டு இருப்பது காணி, இயந்திரரோபகரணங்கள் மற்றும் கட்டங்களின் மீள் கட்டமைப்பிற்காக ஒப்பீடுகள் மேற்கொள்ளப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெலவின சம்பிரதாயங்கள் பயன்படுத்தும் அடிப்படையில் ஆகும். பொருத்தமான இடங்களில் இக் கொள்கைக்குப் பின்னர் காணப்படும் குறிப்புக்கள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

#### 1.3 ஐந்தொகை தினத்திற்குப் பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகை தினத்திற்குப் பின்னர் இம்பெற்ற அனைத்து குறிப்பிடத்தக்களவு சம்பவங்களையும் கருத்திற கொண்டு தேவையான இடங்களில் நிதி வெளிப்பாடுகளில் ஒப்பீடுகள் மற்றும் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 2. சொத்துக்கள் மற்றும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படை

கொடுப்பனவு நிலுவையில் சொத்தாக வகைப்படுத்தப்பட்டு இருப்பது நிதி மற்றும் வங்கியில் உள்ள நிலுவை மற்றும் பொதுவான செயற்பாட்டு சுற்றில் அல்லது கொடுப்பனவு நிலுவைத் தினம் தொடக்கம் ஆண்டுக்குள் (இதனைவிட குறுகிய காலத்திற்குள்) நிதியாக கிடைக்பபெறுபவைகளாகும்.

#### 2.1 உரிமை கொண்ட சொத்துக்கள்

சொத்துக்கள் மற்றும் இயந்திரோபரணங்களில் குறிப்பிடப்பட்டு இருப்பது திரண்ட தேய்மானங்களுக்குப் பினனராகும். தமது கட்டியெழுபப்பட்ட சொத்துக்களின் செலவினங்களில் பொருட்கள் மற்றும் ஊதியம் உள்ளடங்கியுள்ளது. சொத்துக்கள் இயந்திரோபகரணங்களின் மாற்றங்கள் பயன்மிக்க வயது எல்லைகள் காணப்படுபவைகள் உள்ளடங்கும் வேளையில் அவை தனித்தனியாக கணக்குகளில் பதியப்பட்டுள்ளன.

**நுவரெலிய காணி மற்றும் கட்டங்கள்**

2008.02.02 வரை அதிகார சபை மூலம் நிருவகிக்கப்பட்ட நுவரெலிய மைதானம் மற்றும் பங்களா, விளையாட்டுத்துறை அமைச்சின் ஆலோசனைகளுக்கு அமைய 2008.02.02 ஆம் திகதி விளையாட்டுதுறை அமைச்சிற்குப் பொறுப்பளிக்கப்பட்டது. 2011 ஆகஸ்ட் மாதம் 23

ஆம் திகதி தொடக்கம் நுவரேலிய குதிரைப்பந்தய விளையாட்டு மைதானத்தின் முகாமைத்துவ பொறுப்புகள் அதிகார சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

**ஆர். பிரேமதாச சர்வதேச கிரிகட் விளையாட்டு மைதானம்**

2006.11.01 ஆம் திகதி ஆர். பிரேமதாச சர்வதேச கிரிகட் விளையாட்டு மைதானத்தின் முகாமைத்துவம், மாதாந்தம் ரூபா 250,000 வாடகையின் கீழ் இலங்கை கிரிகட் நிருவகத்திற்கு 30 வருட கால குத்தகைக்கு வழங்கப்பட்டது. இது எவ்வாறாக இருப்பினும் 2006.12.31 ஆம் திகதி கொடுப்பனவு நிலுவைக்கு அமைய, முகாமைத்துவத்தினைப் பொறுப்பேற்பதற்கு முன்னர் இலங்கை இலங்கை கிரிகட் நிறுவகம், கிரிகட் அகடமியிற்காக ரூபா 25,753,844.64 செலுத்துவதற்கு இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது எவ்வாறாக இருப்பினும் இந் நிதி அளவு மற்றும் எதிர்கால குத்தகைக் கூலி தொடர்பாக மீண்டும் கலந்துரையாட வேண்டியுள்ளது.

**பெலியத்த மற்றும் வீரகெடிய நீச்சல் தடாக கட்டத்தொகுதி.**

பெலியத்தை தொழில்நுட்ப கல்லூரி நீச்சல் தடாக மற்றும் வீரகெடிய இராஜபக்ஷ மத்திய கல்லூரி நீச்சல் தடாக பராமரிப்பு செயற்பாடுகளுக்காக மாத்திரம் 2008 ஆகஸ்ட் 07 ஆம் திகதி அதிகார சபைக்கு பொறுப்பளிக்கப்பட்டது. 2008 ஆம் ஆண்டில் இந் நீச்சல் தடாகத்திற்கான செலவினம் சுகததாச உள்ளக விளையாட்டு மைதானத்தின் செலவினங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2009 ஆம் ஆண்டில் இந் நீச்சல் தடாகத்திற்காக தனித்தனியாக கணக்குகளில் பதியும் செயற்பாடுகள் நிருவாக சபையினால் அங்கீரிக்கப்பட்டுள்ளது. இச் சொத்துக்கள் இது வரையில் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவில்லை.

## 2.2 பின்னர் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள்

சொத்துக்கள் இயந்திரோபகரணங்களில் அடங்கும் ஏதேனும் பகுதிகளை மீள தாபிப்பதற்கான செலவினங்கள் தனியாக கணக்குகளில் பதியப்பட்டுள்ளன, அச் செலவினங்கள் மூலதனமயமாக்கப்படுகின்றது. அப் பகுதியில் ஏதேனும் பொறுமதிகள் எஞ்சியிருப்பின், அக் கணக்குப் புத்தகத்தில் இருந்து நீக்கப்படுகின்றது. ஏனைய, பின்னர் மேற்கொள்ளப்படும் செலவினங்கள் மூலதனமாக்கப்படுவது அச் செலவினங்களின் கீழ் சொத்துக்களில் உள்ளடங்கும் பொருளாதார பயன்கள் விருத்தி செய்யப்பட்டு இருந்தால் மாத்திரமாகும். ஏனைய அனைத்து செலவினங்கள், வருமான வெளிப்பாடுகளில் கருத்திற்கொள்ளப்படுவது மேற்கொள்ளப்பட்ட செலவினங்களின் அடிப்படையிலாகும்.

## 2.3 தேய்மானம் மேற்கொள்ளல்

தேய்மானம் மேற்கொள்ளல், இயந்திர உபகரணங்களில் பயண்மிக்க ஆயுட்காலத்தை தழுவக்கூடிய வகையில், குறுகிய வீதி முறைக்கு அமைய வருமான வெளிப்பாடுகளில் அறவிடப்படுகின்றது. காணி தொடர்பான தேய்மானம் மேற்கொள்ளப்படவில்லை. கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டிற்கான முழுமையாக தேய்மானம் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதுடன், சொத்துக்கள் அகற்றப்பட்ட ஆண்டிற்கான தேய்மானம் மேற்கொள்ளப்படுதில்லை.

ஒளி விளக்கு மற்றும் மின் விளக்கு மீண்டெழும் கணக்கின் மூலம் மூலதன சொத்தாக மாற்றுவதற்காக முகாமைத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. ஒளி விளக்குகளுக்காக தேய்மானம் மேற்கொள்ளல் 50% தொடக்கம் 33.3% வரை குறைத்தல் முகாமைத்துவ சபையினால் அங்கீரிக்கப்பட்டுள்ளது. தேய்மானம் மேற்கொள்ளும் விகிதாசாரம்.

| | |
|---|---|
| உரித்து கொண்ட கொண்ட கட்டம் | 2.3% |
| ஒளி விளக்கு | 10% |
| செயற்கை ஓடுபாதை | 20% |
| இயந்திரோபகரணம் | 10% |
| மோட்டார் வாகனம் | 20% |
| விளையாட்டு உபகரணங்கள் | 10% |
| மனைப் பொருட்கள் | 10% |
| அலுவலக உபகரணங்கள் | 10% |
| கணணி | 25% |
| ஆடை | 50% |
| மின் விளக்கு | 33.3% |

ரூபா 7 500 000 பெறுமதியான இலக்கம் NB-1527 கொண்ட புதிய வான் வண்டி இவ் ஆண்டில், வரவு செலுவு சுற்றறிக்கை 150 இற்கமைய பொதுத் திறைசேரியினால் இவ் அதிகார சபைக்கு வழுங்கப்பட்டது. வாகனங்களின் பொறுமதி அதிகார சபையின் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டு இருப்பது அவற்றிற்குரிய காப்புறுதி பெறுமதிக்கு அமைவாகும்.

ரூபா 210 267.86 பெறுதியான BBG-3006 புதிய மோட்டார் சைக்கிள், வரவு செலவு சுற்றறிக்கை இலக்கம் 150 இற்கமைய, பொதுத் திறைசேரியினால் இவ் அதிகார சபைக்கு இவ் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

## 2.4 பொருட் பட்டியல்

பொருட் பட்டியல் ஆவணப்படுத்தப்பட்டு இருப்பது செலவினத்தின் அடிப்படையிலாகும். பொதுவாக நோக்கும் போது செலவினம் “ஆரம்ப பிரவேசம் ஆரம்ப வெளியீடு” அடிப்படையில் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. கொள்வனவு மற்றும் தொடர்புபட்ட அனைத:து செலவினங்கள் மற்றும் நிலைப்படுத்தும் செலவினமும் உள்ளடக்கபட்டுள்ளது. தேவையானவாறு பொருட் பட்டியலில் காணப்படும் காலம் கடந்தவைகள் தொடர்பாக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உள்ளக மற்றும் வெளிக் களஞ்சியங்களில் ஒரு பிரதான களஞ்சியமாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 2.6 ஆர. பிரேமதாச விளையாட்டுக் கட்டத்தொகுதியின் இருப்பு

இந் நிறுவனத்தின் பொருட் பட்டியல் ரூபா .... பொறுமதியான இருப்பினை நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ் இருப்பு நீண்டகாலம் தொடக்கம் காணப்படுகின்றது. ஏற்பட்ட நட்டம் உரிய கம்பனியினால் அறவிடப்படும்.

## 3. பொறுப்புக்கள் மற்றும் ஒதுக்கீடுகள்

நிதி வெளிப்பாடுகளைத் தயாரிக்கும் போது அனைத்து அடையாளம் காணப்பட்ட பொறுப்புக்கள் கணக்குகளில் பதியப்பட்டுள்ளன. ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்புக்களாக வகைப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு இருப்பது, கோரும் போது செலுத்த வேண்டிய பொறுப்புக்கள் அல்லது ஐந்தொகை தினம் தொடக்கம் ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டிய பொறுப்புக்களாகும். நடைமுறைல்லாத பொறுப்புக்களாக காணப்படுவது கணக்கு நிலுவைத் தினம் தொடக்கம் ஒரு வருடத்திற்குப் பின்னர் திர்க்க வேண்டிய பொறுப்புக்களாகும்.

### 3.1 ஊழியர் பிரதிலாபம்

ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் பொறுப்பு நிதி இரண்டாவது பங்காளர் முறையாகும். இந் நிதியங்களுக்கு மேற்கொள்ளப்படும் பங்காளர், வருமான வெளிப்பாட்டில் செயலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றது.

### 3.2 வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவு

இவை செலவின அடிப்படையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 3.3 ஓய்வூதிய பிரதிலாப இணைப்புக்கள்

அனைத்து ஊழியர்களுக்கு தமது சேவையின் முதலாவது, ஆண்டு தொடக்கம் பணிக்கொடைக் கொடுப்பனவினை மேற்கொள்வதற்கு ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது எவ்வாறாக இருப்பினும், 1983 இலக்கம் 13 கெண்ட பணிக்கொடை சட்டத்திற்கு அமைய ஊழியர் தொடர்பான பொறுப்புக்கள் உருவாகுவர் 05 வருடகாலம் தொடர்ச்சியான சேவையாற்றியதன் பின்னராகும்.

## 4. நிதி செயற்சாதனை வெளிப்பாடுகள்

### 4.1 வருமானம்

வருமானம் முக்கியமாக பிரதான திரண்ட அடிப்படைக்கு அமைய குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது சேவை வழங்கள் மற்றும் பூர்த்தி செய்வதற்கு அமைவாகும்.

### 4.2 செலவினம்

வருமான வெளிப்பாட்டில் குறிப்பிடப்பட்டு இருப்பது, அதிகார சபையின் வரி அறவிடுவதற்கு முன்னர் ஈட்டப்பட்ட இலாபம் அல்லது ஏற்பட்ட நட்டம், அனைத்த அடையாளம் காணப்பட்ட பொறுப்புக்களுக்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டதன்

பின்னர் ஆண்டின் இலாபத்தை கணிப்பீடு செய்யும் வர்தகத்தை முன்னெடுப்பதற்காக அனைத்து செலவினங்கள் மற்றும் மூலதன சொத்துக்கள் வினைத்திறன் மட்டத்தில் வைத்திருப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட செலவினம் வருமானத்திற்கு அறவிடப்பட்டுள்ளது.

சொத்துக்கள் இயந்திரோபகரணங்களை அகற்றும் போது ஏற்படும் நட்டம் மற்றும் நட்ட வருமான விகிதாசாரம் காண்பிக்கப்பட்டுள்ளது. பணியாளர் சபையிடம் அறவிடப்பட்ட குத்தகைக் கூலி, நீர், மின்சாரம் மற்றும் தொலைபேசி கட்டணத்திற்கு உரிய செலவினம் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 4.3 நிதி ஒதுக்கீட்டு செலவினம்

நிலையான வைப்புக்களில் இருந்து கிடைக்கும் வட்டி, கிடைக்கக் கூடியவாறு வருமான வெளிப்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடன் பெற்றுக் கொள்ளும் போது செலுத்தப்படும் வட்டி மற்றும் ஏனைய செலவினங்கள், நிதி பெறுகைச் செலவினத்தில் உள்ளடக்கப்பட்ட செலவினமாகும்.

### 4.4 ஒதுக்கீடுகள்

துறைசாந்த செலவினத்தை தீர்ப்பதற்காக எதிர்பாக்கும் கொடுப்பனவு மற்றும் மானிய உதவியினை ஒப்பீடு செய்வதற்கு அவசியமான கால எல்லைக்குள் கிரமமான அடிப்படையில் வருமான வெளிப்பாடுகளில் வைப்பிலிடப்பட்டுள்ளது. சொத்துக்கள் மற்றும் தொடர்புபட்ட நிதியல்லாத கொடுப்பனவும், உள்ளடக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகள், நியாயமான பெறுமதிக்கு, ஐந்தொகயைில் தளம்பல் கொடுப்பனவாக கருதி, உரிய சொத்தின் பயன்மிக்க ஆயுட்காலத்திற்குள் வருமான வெளிப்பாட்டில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

## 5. நிதிப் பாய்ச்சல் வெளிப்பாடுகள்

**நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகள்**

நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகளான வரைவிலக்கனப்படுத்தப்பட்டு இருப்பது கையில் உள்ள காசு மற்றும் வங்கயில் உள்ள வைப்புக்களாகும். நிதிப் பாயச்சல் வெளிப்பாட்டில் வேறு முறையினை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

## 6. கொடுப்பனவு நிலுவை தினத்திற்குப் பின்னரான சம்பவங்கள்

அனைத்து முக்கயித்துவம் வாய்ந்த சம்பங்களாக கருதி, பொருத்தமான இடங்களில் கணக்குகளுக்கு உரிய குறிப்புக்களில் ஒப்பீடுகள் மற்றும் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 7. நிச்சயமற்ற பொறுப்புக்கள்

நீதிமன்றங்களில் முன்னெடுக்கப்படும் ஒரு சில வழக்குகளாகும்.

நுகேகொட மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் இலக்கம் 2184/எம்/2015 கொண்ட வழக்கு.

2013 ஆம் ஆண்டில் சுகதாச கட்டத் தொகுதி அதிகார சபையின் முன்னாள் தலைவர் பிரகேடியர் விமல் சமரதுங்க, அதிகார சபைக்கு உரிய வகானத்தை செலுத்திக கொண்டு இருக்கும் போது விபத்திற்கு உள்ளாகி, அதனால் ஜயான் விசாகா லியனகே என்ற பிள்ளை உயிர் இழந்தார். அவரின் பெற்றோர் பிரதிவாதிகளிடமிருந்து நட்டத்தைக் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரகேடியர் விமல் சரதுங்க மற்றும் சுகததாச கட்டத் தொகுதி அதிகார சபை முதலாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளது. முறைப்பாட்டாளர் பிரதிவாதிகளிடமிருந்து ரூபா 50 000 000 இழப்பீட்டு நட்டத்தைக் கோரியுள்ளனர்.

நிதி வெளிப்பாடுகள்

**வருமான செலவின வெளிப்பாடுகள் - 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக**

| வரவு செலவு (அமுலில் உள்ள ஆண்டு) | | 2020.12.31 | 2019.12.31 |
|---|---|---|---|
| 163,920,000.00 | செயற்பாட்டு வருமானம் | 49,973,357 | 146,201,789 |
| | செயற்பாடல்லாத வருமானம் | 892,396 | 22,842,537 |
| 163,920,000.00 | | 50,865,753 | 169,044,326 |
| | | | |
| 319,000,000.00 | அரசாங்கத்தின் திறைசேரி வழங்கள் | 257,820,000 | 234,150,000 |
| | | | |
| 482,920,000.00 | **மொத்த வருமானம்** | 308,685,753 | 403,194,326 |
| | | | |
| | **செலவினம்** | | |
| | **செயற்பாட்டு செலவினம்** | | |
| 256,480,000.00 | ஊழியர் சம்பள செலவினம் | 186,553,786 | 191,059,601 |
| - | முகாமைத்துவ சபை கொடுப்பனவு மற்றும் செலவினம் | 247,500 | 322,500 |
| - | பணிக்கொடை ஒதுக்கீடு | 3,464,795 | 13,402,966 |
| - | தேய்மானம் | 117,974,703 | 134,951,324 |
| 62,520,000.00 | ஏனைய செலவினம் | 81,222,295 | 124,340,537 |
| 319,000,000.00 | | 389,463,078 | 464,076,928 |
| | | | |
| 163,920,000.00 | **செயற்பாட்டு மிகை (பற்றாக்குரை)** | -80,777,325 | -60,882,601 |
| | | | |
| | நிதி செலவினம் | -90,225 | -6,752,139 |
| 163,920,000.00 | **வரிக்கும் முன்னா் மிகை (பற்றாக்குரை)** | -80,867,550 | -67,634,741 |
| | | | |
| | **கூட்டு ( செய்பாடு அல்லாத வருமானம்** | | |
| - | நிலையான வைப்பு வட்டி வருமானம் | 4,233,581 | 4,448,709 |
| | **வரிக்கு முன்னா் தேறிய மிகை (பற்றாக்குரை)** | -76,633,969 | -63,186,032 |
| | | | |
| | **வருமான வரி** | -330,219.00 | -346,999.00 |
| | | | |
| | **ஆண்டின் மிகை (பற்றாக்குரை)** | -76,964,188 | -63,533,031 |

ஐந்தொகை – 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான

| | 2020.12.31 (ரூபா) | 2019.12.31 (ரூபா) |
|---|---|---|
| நடைமுறைச்சொத்து | | |
| நிதி மற்றும் வங்கி நிலுவை | 99,890,505 | 16,880,838 |
| கடன்படுனர் | 25,222,264 | 25,332,980 |
| இருப்பு | 10,578,505 | 13,125,629 |
| பணியாளர் சபையின் பத்துமாத கடன் வழங்குதல் | 27,477,246 | 30,660,710 |
| ஏனைய கிடைக்க வேண்டிய நிலுவை | 32,994,623 | 105,601,374 |
| பணிக்கொடை நிதியம் | 5,322,801 | 5,134,376 |
| நிலையான வைப்பு | 45,718,331 | 41,317,356 |
| | **247,204,276** | **238,053,261** |
| | | |
| நிலையான சொத்து | | |
| காணி | 2,856,612,140 | 2,856,612,140 |
| கட்டடம் | 2,141,979,790 | 2,029,654,365 |
| அதி சக்தி வாயந்த கோபுரம் | - | - |
| அதிசக்திவாயந்த மின் விளக்கு | 112,457.00 | 195,688 |
| இயந்திரம் மற்றும் உபகரணங்கள் | 52,311,425 | 62,929,431 |
| கணணி | 739,775 | 2,954,161 |
| மோட்டார் வாகனம் | 5,584,203 | 7,437,253 |
| விளையாட்டு உபகரணங்கள் | 52,886,409 | 43,217,334 |
| தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் | 52,579,222 | 59,890,940 |
| அலுவலக மற்றும் ஏனைய உபகரணங்கள் | 8,018,621 | 8,811,022 |
| தராசி | 0 | 50,500.00 |
| அமுலில் உள்ள பணிகள் | 302,140,214 | 308,889,579 |
| | **5,472,964,256** | **5,380,642,414** |
| | | |
| மொத்த சொத்துக்கள் | **5,720,168,533** | **5,618,695,675** |
| | | |
| மூலதனப் பங்கு மற்றும் பொறுப்புக்கள் - நடைமுறைச் சொத்து | | |
| வர்த்தக கடன்படுனர் | 2,445,002 | 2,305,259 |
| பாதுகாப்பு வைப்பு | 16,675,900 | 20,943,123 |
| முன்னர் கிடைத்த வருமானம் | 250,000 | 270,000 |
| குத்தகை ஒதுக்கீடு | 2,240,407 | 1,910,188 |
| திரண்ட செலவினம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய செலவினம் | 18,014,528 | 13,600,147 |
| ஏனைய செலுத்த வேண்டியவைகள் | 160,333,807 | 218,573,251 |
| | **199,959,645** | **257,601,968** |
| நடைமுறையல்லாத சொத்துக்கள் | | |
| பணிக்கொடை ஒதுக்கீடு | 82,147,340 | 82,147,340 |
| | **82,147,340** | **82,147,340** |

| | | |
|---|---|---|
| | **282,106,985** | **339,749,308** |
| **தேறிய சொத்துக்கள்** | **5,438,061,548** | **5,278,946,367** |
| **தேறிய சொத்து / மூலதனப் பங்கு** | | |
| **அரசாங்கத்தின் வழங்கள்** | 7,346,762,609 | 7,104,462,609 |
| **திரண்ட நிதியம்** | -1,841,071,525 | -1,771,317,864 |
| **மீள்மதிப்பீட்டு மிகை** | 9,334,652 | 9,334,652 |
| **ஆண்டின் மிகை /குறைவு** | -76,964,188 | -63,533,031 |
| **மொத்த மூலதனப் பங்கு மற்றும் பொறுப்புக்கள்** | **5,438,061,548** | **5,278,946,367** |

நிதிப் பாய்ச்சல் வெளிப்பாடு – 2020.12.31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்காக

| | 2020.12.31 (ரூபா) | 2019.12.31 (ரூபா) |
|---|---|---|
| **செயற்பாடுகள் மூலம் பெற்ற நிதிப் பாய்ச்சல்** | | |
| **வரிக்கு முன்னர் மிகை அல்லது தேறிய குறைவு** | **-76,964,188** | **-63,533,031** |
| | | |
| திரண்ட நிதியத்திற்கு கடந்த ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட தேய்மான ஒப்பீடுகள் | - | - |
| தேய்மான ஒப்பீடுகள் | 117,974,703 | 134,951,324 |
| பணிக்கொடை ஒதுக்கீடு | 3,464,795 | 13,402,966 |
| (அதிகரிப்பு)/குறைவு இருப்பு | 2,547,124 | -2,848,876 |
| (அதிகரிப்பு)/குறைவு கிடைக்க வேண்டிய நிலுவை | 70,320,391 | -12,036,769 |
| (அதிகரிப்பு)/குறைவு செலுத்த வேண்டிய நிலுவை | -56,893,632 | 127,942,483 |
| பணிக்கொடை கொடுப்பனவு ஏனையவை | -3,464,795 | -2,399,770 |
| **செயற்பாடுகள் மூலம் பெற்ற தேறிய நிதி நிலுவை** | **56,984,397** | **195,478,326** |
| | | |
| **முதலீட்டு செயற்பாடுகள் மூலம் பெற்ற நிதிப் பாய்ச்சல்** | | |
| சொத்துக்கள் ஆதனங்கள் மற்றும் உபகரண கொள்வனவு | -211,873,754 | -439,604,638 |
| குத்தகைக் கொடுப்பனவு | - | - |
| நிலையான வைப்புக்களில் முதலீடு | -4,400,975 | -918,767 |
| REPO முதலீடு | - | - |
| **முதலீட்டு செயற்பாடுகள் மூலம் பெற்ற நிதிப் பாய்ச்சல்** | **-216,274,729** | **-440,523,405** |
| நிதி செயற்பாடுகள் மூலம் பெற்ற நிதிப்பாய்ச்சல் | | |
| முன்னைய ஆண்டின் ஒப்பீடுகள் | - | 10,448,714 |
| அரசாங்கத்தின் மூலதன வழங்கள் | 242,300,000 | 143,000,000 |

| | | |
|---|---|---|
| நிதி செயற்பாடுகள் மூலம் பெற்ற நிதி நிலுவை | **242,300,000** | **153,448,714** |
| | | |
| நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு | **83,009,668** | **-91,596,364** |
| ஆண்டு ஆரம்பத்தில் நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகள் | **16,880,838** | **108,477,202** |
| ஆண்டு இறுதியிர் நிதி மற்றும் நிதிக்கு அண்மித்தவைகளின் நிலுவை | **99,890,505** | **16,880,838** |

**விளையாட்டு மைதானத்திற்கு அமைய வருமானம் - 2020**

| விளையாட்டு மைதானம் | செயற்பாட்டு வருமானம் | செயற்பாடு அல்லாத வருமானம் |
|---|---|---|
| **சுகததாச உள்ளக விளையாட்டுத் திடல்** | 17,002,352.00 | 348,412.00 |
| **சுகததாச திறந்த வெளி விளையாட்டு மைதானம்** | 21,200,135.00 | 262,040.00 |
| **ஆர் பிரேமதாச விளையாட்டு மைதானம்** | 2,750,000.00 | - |
| **போகம்பர விளையாட்டு மைதானம்** | 6,246,070.00 | 219,932.00 |
| **பெலியத்தை நீச்சல் தடாகம்** | 425,500.00 | 21,270.00 |
| **நுவரெலிய குதிரைப் பந்தய விளையாட்டு மைதானம்** | 2,349,300.00 | 40,742.00 |
| **மொத்த வருமானம்** | **49,973,357.00** | **892,396.00** |

**நிறுவனத்தின் மொத்த முன்னேற்றங்கள்**

2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆண்டு வரை நிறுவனத்தினால் ஈட்டப்பட்டுள்ள வருமானம் கீழ் குறிப்பிடப்பட்டவாறு தளம்பளாக காணப்படுகின்றது.

இது எவ்வாறாக இருப்பினும் 2019 ஆம் ஆ்ண்டிற்கு இணைவாக டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி நிறுவனத்தின் மொத்த வருமானத்தை மூன்று மடங்கிற்கு மேற்பட்டளவு வீழ்ச்சியடைந்துள்ளதனை கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு தாக்கம் செலுத்திய அண்மித்த காரணமாக அமைந்தது விளையாட்டு துறையினை முன்னெடுத்துச் செல்வதற்கு அச்சுறுத்தலாக காணப்பட்ட நாட்டில் துரிதமாக பரவிய உலகளாவிய கொரோனா தொற்று நோயாகும்.

2020 மார்ச் மாதம் 11 ஆம் திகதி முதலாவது கொரோனா நோயாளர்கள் அறிக்கைப்படுத்தப்பட்டதன் பின்னர் தொற்றுக் உள்ளான நோயாளர்கள் நாளாந்தம் அதிகரித்துள்ளது. இதன் பெறுபேறாக அரசாங்கத்தினால் பொதுமக்களுக்கு இடையெ நோய் பரவுவதை தடுப்பதற்காக 2020 மார்ச் மாதம் 22 ஆம் திகதி தொடக்கம் மே மாதம் இறுதிவரை முழு நாட்டிலும் தனிமைப்படுத்தும் ஊரடங்குச் சட்டம் மற்றும் போக்குவரத்திற்காக வரையறைகளை விதிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதற்கு அமைய சுகாதார அமைச்சு மற்றும் பொது நிருவாக அமைச்சினால் தொற்று நோய் நிலமையினை கட்டுப்படுத்துவற்காக வழங்கப்பட்ட வழிகாட்டல் ஆலேசனைகளின் வழிகாட்டல்களின் கீழ் தாபன செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கும், பணியாளர் சபையினை அழைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

நோய் நிலமையினைக் கட்டுப்படுத்துவதற்காக அனைத்து நிறுனங்களிலும் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளின் தன்மைக்கு அமைய ஆரம்பிப்பதற்கு சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட ஆலொசனைகளுக்கு அமைய இவ் அதிகார சபைக்கும் விளையாட்டு செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டி ஏற்பட்டதுடன், இதற்காக வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டல் ஆலோசனைகள் அனைத்தும் அவ்வறே பின்பற்ற வேண்டி ஏற்பட்டது. விளையாட்டு செயற்பாடுகள் தொடர்பில் வழங்கப்பட்ட ஆலோசனைகளின் விளையாட்டு மற்றும் போட்டி நிகழ்ச்சிகளை நீண்டகாலம் தொடக்கம் ஆரம்பிக்க முடியவில்லை. இதற்கான காரணமாக அமைந்தது விளையாட்டு செயற்பாடுகளின் பின்பற்ற வேண்டிய சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளை கடைபிடித்து விளையாட்டு செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாமல் சென்றது. (முகக் கவசத்தை அணிதல், இரு வருக்கு இடையிலான தூரத்தினைப் பேனுதல் போன்றன) கடந்த ஆண்டுகளில் இடம்பெற்ற இசைக் கச்சேரி நிகழ்வுகள் நடைபெறாமை வருமானத்தை இழப்பதற்கு பிரதான காரணியாக தாக்கம் செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு அமைய கொவிட் நோய் பரவுவது சிறிதளவு குறைவடைந்த சந்தர்பங்களில், முதலில் திறந்தவெளியில் நடாத்த முடியுமான விளையாட்டு நிகழச்சிகள் (குழு அல்லாத வகையில்) மாத்திரம் என்பதுடன், சுகாதார வழிகாட்டல் ஆலோசனையின் கீழ் கட்டமாக மாத்திரம் விளையாட்டு செயற்பாடுகளை ஆரம்பித்து முன்னெடுக்க வேண்டிய நிலமை அதிகார சபைக்கு

ஏற்பட்டது. இக் கட்டத்தில் ஒதுக்கப்பட்ட அநேகமான விளையாட்டு செயற்பாடுகளை இரத்து செய்யப்பட்டதுடன், புதிதாக ஒதுக்கிக் கொள்ளும் செயற்பாடுகள் இடம்பெறவில்லை.

அத்துடன் நாளாந்தம் குறிப்பிடத்தக்களவு வருமானம் ஈட்டப்பட்ட சுகததாச திறந்தவெளி வாகனத் தரிப்பிடம் மற்றும் போகம்பர விளையாட்டு மைதானத்தின் வகானத் தரிப்பிடத்திற்காக வருகை தரும் வாகனங்கள் மிகக் குறைந்த அளவு காணப்படுகின்றமையினால் அதிகார சபைக்கு பாரிய வருமானத்தை இழக்க நேரிட்டமை குறிப்பிடத்தக்கது.

| ஆண்டு | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | 69.00 | 77.17 | 89.03 | 134.61 | 99.62 | 82.51 | 100.29 | 125.34 | 169.04 | 50.86 |




**நிறுவனத்தின் மொத்தக் கடன்**

2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை கடன் நிலமைகள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு தளம்பல் அடைந்துள்ளது.

| ஆண்டு | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கடன் | 42.95 | 42.04 | 41.00 | 45.00 | 44.00 | 43.70 | 40.254 | 39.995 | 26.819 | 25௧222 |



**கணக்காய்வாளர் அறிக்கை**

**தலைவர்,**
**சுகததாச தேசிய விளையாட்டு அதிகார சபை.**

**சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டத் தெகுதி அதிகார சபையின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி வெளிப்பாடுகள் தொடர்பாக மற்றும் ஏனைய சட்ட மற்றும் மேற்பார்வைத் தேவைகள் குறித்த 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆவது வாசகத்திற்கு அமைய கணக்காய்வாளரின் அறிக்கை.**

## 1. நிதி வெளிப்பாடுகள்

### 1.1. நிலமை வெளிப்பாடுகள் தொடர்பான கருத்துரை

சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டத் தொகுதி அதிகார சபையின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலமை வெளிப்பாடுகள் மற்றும் அன்றைய தினத்துடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற் சாதனை வெளிப்பாடுகள், உரிமை ஒதுக்கீட்டு வெளிப்பாடுகள் மற்றும் அன்றைய தினத்துடன் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிப் பாய்ச்சல் வெளிப்பாடுகள் மற்றும் நிதி வெளிப்பாடுகளுக்கு உரிய குறிப்புக்கள், சுருக்கமான முக்கியத்துவம் வாய்ந்த கணக்கீட்டு கொள்கைகள் அடங்கும் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதி வெளிப்பாடுகள் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியல் யாப்பின் 154 (1) சரத்துடன் இணைத்து வாசிக்க வேண்டிய 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் மற்றும் 1971 இலக்கம் 38 கொண்ட நிதி சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய எனது கட்டளையின் கீழ் இது கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டது. அரசியல் யாப்பின் 154 (6) வாசகத்திற்கு அமைய எனது அறிக்கையை எதிர்வரும் காலங்களில் பாராளுமன்றத்திற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ் அறிக்கையின் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்ட கருத்துரைக்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களைகத் தவிர, சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டத் தொகுதி அதிகார சபையின் நிதி வெளிப்பாடுகள் மூலம் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலமைகள் மற்றும் அன்றைய தினத்துடன் முடிவடைந்த ஆண்டிற்காக அதன் நிதி செயற்பாடுகள் மற்றும் நிதிப் பாய்ச்சல் இலங்கை அரச துறையின் கணக்கீட்டுத் தரங்களுக்கு அமைய உண்மையான மற்றும் நியாயமான நிலமைகள் சித்திரித்துக் காட்டப்படுவது எனது கருத்தாகும்.

### 1.2. நிலமை மதிப்பீட்டிற்குட்படுத்தப்பட்ட கொள்கைக்கான அடிப்படை

(அ). இலங்கை அரச துறையின் கணக்கீட்டுத் தரம் 07 இல் 65 ஆவது வாசகத்திற்கு அமைய நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பயன்மிக்க ஆயுட்காலம் வருடாந்தம்

மீளாய்விற்கு உட்படுத்தப்படாமையினால் செலவினம் ரூபா 706,536,074 என்ற நிலையான சொத்துக்கள் முழுமையான தேய்மானத்திற்கு உட்படுத்திய போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்றது. அவ்வாறு இருந்த போதிலும் இச் சொத்துக்களின் பயன்மிக்க ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீடுகள் மீள மீளாய்விற்கு உட்படுத்தி கணக்குகளில் ஒப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(ஆ). 2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி வெளிப்பாடுகளுக்கு அமைய பணிக்கொடை ஒதுக்கீடுகள் ரூபா. 82,147,340 என்ற போதிலும் சரியான பணிக்கொடை ஒதுக்கீடு ரூபா 83,270,195 என்பதனால் பணிக்கொடை ஒதுக்கீடு மற்றும் ஆண்டின் பணிக்கொடை செலவினம் ரூபா. 1,122,855 இனால் குறைவாக குறிப்பிடப்பட்டு இருப்பதனால் ஆண்டின் குறைபாடுகளுக்கு அமைய அவ் அளவில் குறைவாக நிதி வெளிப்பாடுகளில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

(இ). கணக்கீட்டுக் கொள்கை 4.4 இற்கமைய, மூலதன வழங்களுக்கு அமைய பொறுப்பேற்கப்பட்ட சொத்து தேய்மானத்தை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக நிதி வெளிப்பாடுகளில் குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும் நடைமுறையல்லாத சொத்துக்களை சுவீகரிப்பதற்காக 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆண்டு வரை 18 ஆண்டுகளுக்குள் அதிகார சபைக்கு கிடைக்கப்பெற்ற ரூபா 2,671 மில்லியன் சொத்துக்களை தேய்மானத்திற்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.

(ஈ). 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் அண்டு வரை நிர்மாண செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்ட பெறுமதி ரூபா 195,063,403 என்ற நிர்மாண செயற்திட்டங்கள் 09 உம் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி வெளிப்பாடுகளில் முடிவுறாத நிலுவையாக குறிப்பிடப்பட்டு இருந்தது. அச் செயற்திட்டங்களை பரிசோதனை செய்து பணிகளை பூர்த்தி செய்யும் சான்றுப் பத்திரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் பயன்படுத்தப்படும் இச் சொத்துக்களின் ரூபா 7,358,187 என்ற தேய்மானம் குறைவாக நிதி வெளிப்பாடுகளில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

(உ). மீள அறவிட முடியாத ரூபா 8,418,371 என்ற சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான வரி நிதி வெளிப்பர்டுகளில் ஒப்பீடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்காது நடைமுறைச் சொத்துக்களின் கீழ் அடையாளம் காணப்பட்டமையினால் நடைமுறைச் சொத்துக்கள் அவ் அளவில் கூடுதலாக குறிப்பிடப்பட்டு இருந்தது.

### 1.4. நிதி வெளிப்பாடுகள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் நிருவிக்கும் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதி வெளிப்பாடுகள் இலங்கை அரசதுறையின் கணக்கீட்டுத் தரங்களுக்கு அமைய தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது

தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய போதியளவு போலி வெளிப்பாடுகள் இன்றி நிதி வெளிப்பாடுகளைத் தயாரிக்கக் கூடியவகையில் தேவையானவாறு உள்ளக நிருவாகத்தை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதி வெளிப்பாடுகளைத் தயாரிக்கும் போது, சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டத் தொகுதி அதிகார சபையினை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லும் இயலுமையினைத் தீர்மானிப்பது முகாமைத்தவத்தின் பொறுப்பு என்பதுடன், முகாமைத்துவம் அதிகார சபையினை ஏல விற்பனை செய்ய எதிர்பார்பதாயின் அல்லது மாற்று செயற்பாடுகள் இல்லாத சந்தர்ப்பத்தில் செயற்பாடுகளை நடாத்த நடவடிக்கை எடுப்பதாயின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டின் அடிப்படைக்கு அமைய கணக்குகளை பேனுதல் மற்றும் சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டத் தொகுதி அதிகார சபையின் தொடர்ச்சியான நிலைப்பாட்டிற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டத் தொகுதி அதிகார சபையின் நிதியினை அறிக்கைப்படுத்தும் செயற்பாடுகள் தொடர்பிலான பொறுப்புக்கள், நிருவகிக்கப்படும் தரப்பினரினால் மேற்கொள்ளப்படுகின்றது.

2018 இலக்கம் 19 கொண்ட கணக்காய்வு சட்டத்தின் 16 (1) உப வாசகத்திற்கு அமைய, சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டத் தொகுதி அதிகார சபையின் வருடாந்த மற்றும் சமகால நிதி வெளிப்பாடுகளைத் தயாரிக்கக் கூடியவகையில் தமது வருமானம், செலவினம், சொத்து மற்றும் வைப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளைப் பேனவேண்டும்.

### 1.5. நிதி வெளிப்பாட்டு கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

முழுமையாக நிதி வெளிப்பாடுகள், சோசடிகள் மற்றும் திருத்தியமைக்கப்படுகின்றமையினால் ஏற்படக் கூடிய அளவியல் ரீதியிலான போலி வெளிப்பாடுகள் அற்றது என்பதனை நியாயமாக உறுதியினை வழங்குதல் மற்றும் எனது கருத்தினை உள்ளடக்கி கணக்காய்வு அறிக்கையினை வெளியிடுவது எனது நோக்கமாகும். நியாயத்தை உறுதிப்படுத்தும் உயர்மட்டத்திலல் உறுதிப்படுத்தலாக காணப்பட்ட போதிலும் இலங்கை கணக்காய்வுத் தரத்திற்கு அமைய கணக்காய்வுகளை மேற்கொள்ளும் போது அது அனைத்து சந்தர்பங்களிலும் போதியளவு போலி அறிக்கைகளில் வெளிப்படுத்தப்படுவதாக உறுதிப்படுத்தலாக அமையாது. மேசடிகள் மற்றும் தவறுகள் தனியாக அல்லது கூட்டான தலையீடுகள் காரணமாக போதியளவு உண்மைக்குப் புறம்பான வெளிப்பர்டுகள் இடம்பெறக்கூடும் என்பதுடன் அதன் போதியளவான நிலமைகள் இந் நிதி வெளிப்பர்டுகளை அடிப்படையாகக் கொண்டு பரிசீலனை செய்வதன் மூலம் எடுக்கப்படும் பொருளாதார தீமானம் தொடர்பிலான தாக்கம் மீது நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை கணக்காய்வுத் தரத்திற்கு அமைய கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போத தொழில்சார் உறுதிப்படுத்தல்கள் மற்றும் தொழில்சார் தயாரிப்புக்ளுடன் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. என்னாள் தொடர்ந்தும்,

- வழங்கப்பட்ட கணக்காய்வு கருத்தினை அடிப்படையாகக் கொண்டு பெற்றுக் கொள்ளும் போது மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதி வெளிப்பாடுகளில் ஏற்படக்கூடிய அளவியல் ரீதியிலான போலி வெளிப்பர்டுகள் உருவாகும் அவதானத்தை அடையாளம் காணுதல் மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்வதற்காக சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத்தமான கணக்காய்வு ஒழுங்கு விதிமுறைகளை திட்டமிட்டு அமுல்படுத்தப்பட்டது. தவுறுதலாக குறிப்பிடப்பட்டமையினால் ஏற்படும் அளவியல் ரீதியிலான போலி வெளிப்பாடுகள் இடம்பெறுவதனால் ஏற்படும் தாக்கங்களைவ ிட மோசடிகாரர்களினால் ஏற்படும் தாக்கங்கள் பலமிக்கது என்பதானால் அவை தூய்மையின்றி, போலி ஆவணங்களைத் தயாரிப்பதன் மூலம், தெரிந்தே தவறவிடுதல், தவறாக குறிப்பிடுதல், அல்லது உள்ளக நிருவாகத்திற்கு வழிவகுத்தல் போன்ற காரணிகளினால் இடம்பெறுவதனால் அகும்.
- உள்ளக நிருவாகத்தின் பயன்பாடுகள் தொடர்பான கருத்தினை வெளிப்படுத்தும் கருத்துடன் இருந்த போதிலும் சந்தர்பத்திறகு ஏற்றவாறு பொருத்தமான கணக்காய்வு ஒழங்குகளைத் திட்டமிடும் வகையில் உள்ளக நிருவாகம் தொடர்பான விளக்கங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளுக்கு பொருத்தமான,கணக்கீட்டு மதிப்பீடுகளில் நியாயமான மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட விடயங்களை வெளிப்படுத்துவது பாரட்டப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ச்சியான நிலைப்பாடுகள் தொடர்பில் போதியளவு நிச்சயமற்ற நிலமைகள் காணப்படுகின்றனவா என்பது தொடர்பி பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வு சாட்சிகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக அதிகார சபையின் தொடர்சியான நிலைப்பர்டுகள் தொடர்பான அடிப்படையினை பயன்படுத்துவதன் பொருத்தமான நிலமைகள் தீர்மானிக்கப்பட்டன. போதியளவு நிச்சயமற்றது என தீமானிக்கபடும் பட்சத்தில் நிதி வெளிப்பாடுகளில் அது தொடர்பிலான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், அவ் வெளிப்படுத்தல்கள் போதியளவு அமையாது இருப்பின் எனது கருத்து ஆய்விற்கு உட்படுத்தப்பட வேண்டும். இது எவ்வாறாக இருப்பினும் எதிர்கால சம்பங்கள் அல்லது நிலமைகளை அடிப்படையாகக் கொண்டு தொடர்ச்சியான உறுதிப்பாட்டினை முடிவுறுத்த முடியும்.
- நிதி வெளிப்பர்டுகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்குவதற்கான கொடுக்கள் வாங்கள்கள் மற்றும் சம்பவங்கள் உரியதாக மற்றும் நியாயமான

உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்களை உள்ளடக்கி நிதி வெளிப்பர்டுகளின் மொத்த சமர்பிப்புக்கள் பாராட்டப்பட்டன.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த கணக்காய்வுகளை கண்டுபிடித்தல், பிரதான உள்ளக நிருவாக முறைகேடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படும் தரப்பினர் அறிவுறுத்தப்பட்டனர்.

**2. ஏனைய சட்ட மற்றும் மேற்பார்வைத் தேவைகள் தொடர்பான அறிக்கை**

2.1. 2018 இலக்கம் 19 கொண்ட இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட தேவைகள் தொடர்பில் விஷேட ஒதுக்கீடுகள் உள்ளடங்கியுள்ளன.

2.1.1. 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைய இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிலமை கருத்துரைப்பிற்கான வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்பார்வையினைத் தவிர கணக்காய்விற்கான தேவைகள் அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னாள் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், எனது பரிசோதனையில் காண்பிக்கப்பட்டவாறு உரிய நிதி அறிக்ஜ முகவர் நிறுவனத்தினால் பேனப்படவில்லை.

2.1.2. 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (இ) (111) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைய அதிகார சபையின் நிதி வெளிப்பாடுகள் கடந்த ஆண்டிற்கு உரியதாகும்.

2.1.3. 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (இ) (1V) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைய இவ் அறிக்கையில் 1.2 (அ), 1.2 (இ) (iv) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்பார்வையினைத் தவிர கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்பிக்கப்பட்ட நிதி வெளிப்பர்டுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2. பின்பற்றப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சாட்சிகளுக்கு அமைய போதியளவு விடயங்களை மட்டுப்படுத்தலில், கீழ் குறிப்பிடப்பட்டவாறு வெளிப்படுத்துவதற்கு எதுவும் எனது கவனத்திற்கு உட்படுத்தப்படவில்லை.

2.2.1 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைய அதிகார சபையின் நிருவாக சபையின் எந்தவொரு அங்கத்தவருக்கும் அதிகார சபையில் தொடர்புபட்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பில் நேரடியாக அல்லது வேறுமுறையில் பொர்துவான வர்த்தக நிலைமைகளுக்கு புறம்பாக தொடர்புபட்டுள்ளதாக,

2.2.2. 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (உ) வசாகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்க அமைய கீழ் குறிப்பிடப்பட்ட மேற்பார்வையினைத் தவிர ஏதேனும் உரிய எழுத்துமூல சாட்சிகளுக்கு சட்டத்திற்கு அல்லது அதிகார

சபையின் நிரவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விஷேட கட்டளைகளுக்கு அமையாதவாறு செயற்பட்டுள்ளதாக,

| சட்டங்கள் / ஒழுங்குகள் உள்ளீடு | மேற்பார்வை |
|---|---|
| (அ). இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் நிதி ஒழுங்குக் கோவை 880 மற்றும் 891 (1) | நிதிக்குப் பொறுப்பாக செயற்படும் உத்தியோகத்திரின் பிணையினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை என்பதுடன் பிணை ஆவணம் பேனப்படவில்லை |
| ஆ. 2018 ஜனவரி 24 ஆம் திகதிய இலக்கம் 05/2008 (i) (1) கொண்ட சுற்றரிக்கையின் மறுசீரமைக்கப்பட்ட 2008 பெப்ரவரி 06 ஆம் திகதிய 05.'.2008 கொண்ட சுற்றரிக்கை | (i). மொத்த பணியாளர் சபைக்காக வருடாந்தம் செயற்சாதனை உடண்படிக்கை கைச்சாத்திடப்பட்டு இருக்கவில்லை.<br><br>(ii). மானிட வள அபிவிருத்தி திட்டத்தினை தயாரித்தல், கொள்ளவு அபிவிருத்தி வேலைத்திட்டத்தை ஒழுங்கமைப்பு, திறன் அபிவிருத்தி வேலைத்திட்டத்தை நடாத்துவது தொடர்பான பொறுப்புக்களைக் கொண்ட சிரேஷ்ட உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு இருக்கவில்லை. |

2.2.3. 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (உ) வாசகத்தில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு அமைய அதிகார சபையின் அதிகாரங்கள், பணிகள், மற்றும் செயற்பாடுகளுக்கு உட்படாத பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக,

2.2.4. 2018 இலக்கம் 19 இலக்கம் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) வாசகத்தில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு அமைய கீழ் குறிப்பிடப்பட்ட மேற்பார்வையினைத் தவிர அதிகார சபையின் உரிய சட்டங்களுக்கு அமைவாக பெறுகை செயற்பாடுகள் பயன்படுத்தப்படவில்லை.

## 2.3. ஏனைய விடயங்கள்

(அ). 01 ஆம் ஆண்டு தொடக்கம் 13 வரையான காலப்பகுதி தொடக்கம் காணப்படும் பெறுமதி ரூபா 22,370,836 கிடைக்க வேண்டிய (வர்த்தக) நிலுவையினை அறவிட நடடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. 04 ஆண்டு காலப்பகுதி தொடக்கம் காணப்படும்

02 கணக்குகளுக்கு உரியதான மூலதன முற்பண பெறுமதி ரூபா 11,072,007 தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.

(ஆ). அதிகார சபையின் நிதி வெளிப்பாடுகளில் விளையாட்டுத்திடல், மற்றும் நீச்சல் தடாகத்தை ஒதுக்குவதற்காக செலுத்தப்பட்ட மீள செலுத்தப்படாத வைப்புப் பெறுமதி ரூபா 16,675,900 என்பதுடன் அப் பெறுமதியில் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 வரை காணப்பட்ட தொடர்ந்தும் பொறுப்பற்ற ரூபா 11,936,484 வைப்பினை வருமானமாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.

(இ). 08 வருடகால எல்லை தொடக்கம் காணப்படும் கிடைக்க வேண்டிய தேக்கிவைக்கப்பட்ட வரி ரூபா 3,297,976 வருமான வரியினை கணிப்பீடு செய்யும் அறிக்கைகளில் வருடாந்தம் உள்ளடக்காமையினால் அறவிடுவதற்கு முடியாது சென்றது.

(ஈ). சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டத் தொகுதி அதிகார சபைக்குரிய ஆர். பெரேமதாச சர்வதேச விளையாட்டு மைதானம் 2006 நவம்பர் 1 ஆம் திகதி தொடக்கம் காலாண்டிற்கு ரூபா 750,000 வீதம் நிலையான குத்தகை அடிப்படையில் 30 ஆண்டுகால எல்லைக்காக இலங்கை கிரிகட் நிறுவகத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு உடண்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இருப்பினும் ஏதேனும் கால எல்லைக்கு ஒரு தடவை சந்தைப் பெறுமதிக்கு பொறுத்தமான வகையில் குத்தகையினை மறுசீரமைப்பதற்காக உரிய நிபந்தனை குத்தகை உடண்படிக்கையில் உள்ளடக்காமையினால் அதிகார சபைக்கு அறவிட முடியுமான வமானத்தை இழக்க நேரிட்டது. மேலும் குத்தகை உடன்படிக்கைக்கு அமைய இலங்கை கிரிகட் நிறுவகம் விளையாட்டு மைதானத்தில் மேற்கொள்வதற்கு இணங்கிய நிர்மாண செயற்திட்டத்திற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(உ). 2015 ஆம் ஆண்டு தொடக்கம் பணிக்கொடை கொடுப்பனவு நிதியத்திற்குரியதாக (Giratuity fund) நிதி வைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 2020 டிசம்பர் 31 ஆம் திகதி தொடக்கம் நிலுவை ரூபா 5,322,801 ஆகும். நிதியினை பயன்மிக்கதாக முதலீடு செய்வதற்கு அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.

(ஊ). இலங்கை கிரிகட் நிறுவகத்திற்கு ஆர் பிரேமதாச சர்வதேச விளையாட்டு மைதானம் பொறுப்பளிக்கப்பட்ட பொறுப்பளிக்கப்படடு இருந்த வேளையில் விளையாட்டு மைதானத்தில் இருந்த விளையாட்டுப் பொருட்கள் உபரகணங்களின் பெறுமதி ரூபா 2,149,491 ஆகும். 2020 மாாச் 11 ஆம் திகதிய இலக்கம் 31∴2020 கொண்ட முகாாமைத்துவ சபையின் தீர்மானத்திற்கு அமைய இலங்கை கிரிகட் நிறுவனத்தினால் அறவிடுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு இருந்தது. இருப்பினும் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் இப் பெறுமதி இலங்கை கிரிகட் நிறுவகத்தினால் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.

(எ). ஒப்பந்தாரர்கள் நிர்மாண செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது பயன்படுத்தப்பட்ட நீர் மற்றும் மின்சாரத்திற்காக 2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்று 14 நிர்மாண நிறுவனங்களிடமிருந்து அறவிட வேண்டிய மொத்தம் ரூபா 2,048,660 ஒப்பந்ததாரர்களிடமிருந்து அறவிடுவதற்கு அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.

(ஏ). சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டத்தொகுதி அதிகார சபையின் பணியாளர் சபையின் தங்குமிட நிர்மாண செயற்திட்டத்தின் 2 வருடங்கள் மற்றும் 5 மாத எல்லை சுகததாச திறந்தவெளி விளையாட்டு மைதானத்தின் பிரதான வாயில் மற்றும் சூழ இரும்பு வேலியினை நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2 வருடகால காலதாமதம் மற்றும் சுகததாச உள்ளக விளையாட்டுத்திடலின் ஆடைமாற்றும் அறை, மலசலகூடம் மற்றும் உணவகங்களின் மறுசீரமைப்பு செயற்பாட்டு செயற்திட்டத்தின் 1 வருட மற்றும் 4 மாதகால எல்லை 2021 டிசம்பர் 31 ஆம் திகதியன்று மேற்பார்வை செய்யப்பட்டது. பணிகளை பூர்த்திசெய்யும் முற்பணத்திற்காக ரூபா 28,878,856 செலுத்தப்பட்டு இருந்த இச் செயற்திட்டம உரிய காலத்திற்குள் நிர்மான செயற்பாடுகளைப் பூர்த்திசெய்யாமையினால் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்று இச் செயற்திட்டம் மூன்றில் அறவிடப்படாத பணிகளை ஆரம்பிக்கும் முற்பணம் நிதி ரூபா 11,585,802 அதிகார சபைக்கு தீர்ப்பதற்கு தாமதமாக காணப்பட்டது.

(ஒ). சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டத்தொகுதி அதிகார சபையின் காற்பந்து விளையாட்டு மைதனத்தின் மற்றும் அபிவிருத்தி செய்யும் செயற்பாடுகள் 2011 ஒக்டோபர் 31 ஆம் திகதியன்று ஒப்பந்த உடண்படிக்கைக்கு அமைய 6 மாத காலத்திற்குள் பூர்த்தி செய்வதற்காக ரூபா 32,000,000 (குத்தகை அற்ற) பெறுமதிக்கு தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு இருந்தது விளையாட்டு மைதானத்தின் நிர்மாண செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக விளையாட்டு மைதானத்தினைப் பயன்படுத்த முடியாத நிலமை ஏற்பட்டு இருந்தது. இவ் விளையாட்டு மைதானத்தின் குறைபாடுகளை திருத்தியமைப்பதற்காக அதிகார சபை தவறி இருந்ததுடன் இப் பணிகளுக்காக அதிகார சபையினால் செலவிடப்பட்டு இருந்தது ரூபா 38,272,147 மீள அறவிடுவதற்காக சட்டரீதியிலான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.

ஓ) செயற்திட்ட நிர்மாணப் பணிகள் உரியவாறு மேற்கொள்ளப்படாமையினால் 01 வருடம் தொடக்கம் 06 வருடங்களை வரையான கால எல்லை தொடக்கம் காணப்படும் ரூபா 17,741,095 தேக்கிவைக்கப்பட்ட நிதியினை தொடர்ந்தும் பொறுப்பு இன்மையினால் நிலுவையினை அடையாளம் காண்டு வருமானத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.

ஓள). சுகததாச தேசிய விளைளயாட்டுக் கட்டத்தொகுதி அதிகார சபையின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்று உதவிப் பணிப்பாளர் ஊடகம், மின், சிரேஷ்ட மட்டத்திலான 02 வெற்றிடங்கள் மற்றும் உள்ளக கணக்காய்வு, பராமரிப்பு செயற்பாடுகள் தொடர்பான உத்தியோகத்தர், பெறுகை உத்தியோகத்தர் மற்றும் பர்துகாப்பு முகாமையாளர் ஆகிய மூன்றாம் நிலை மட்டத்திலான 04 பதவிகள் உட்பட மொத்த வெற்றிடங்கள் 69 காணப்பட்டதுடன் அவ் வெற்றிடங்களை நிறப்புவதற்காக அதிகார சபை தவறியுள்ளது.

**டப்ளியூ.பீ..சீ. விக்ரமரத்ன**
**கணக்காய்வாளர்**

**சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டத்தொகுதி அதிகார சபையின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி வெளிப்பாடுகள் மற்றும் ஏனைய சட்டங்கள் மற்றும் மேற்பார்வைத் தேவைகள் தொடர்பாக 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11 ஆம் வாசகத்திற்கமைய கணக்காய்வாளரின் அறிக்கை தொடர்பாக தற்போதைய நிலைமைகள்.**

**1.2 மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்ட நிலைமைகளுக்கான அடிப்படை**

(அ) இவ் விடயம் பல ஆண்டுகள் தொடக்கம் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் இதனை மேற்கொள்ளும் போது பிரயோக ரீதியில் பல பிரச்சினைகள் எழுந்துள்ளதாக தயவாய் அறிவிக்கிறேன். தற்போது எம்மாள் நிலையான சொத்து ஆவணத்தை பராமரித்து காணப்பட்ட போதிலும் அதில் உள்ள பல ஆண்டுகளுக்கு முன்னர் கொள்வனவு செய்த ஒரு சில வகைகள் மற்றும் அவற்றின் உரியவாறு தனித்தனியாக அடையாளம் கானும் தேவைகள் காணப்படுகின்றன. இருப்பினும் ஏற்கனவே அதனுடன் தொடர்புபட்ட ஏனைய பழைய ஆவணங்கள், பொருள் ஆய்வு அறிக்கையினை பரிசோதனை செய்து குறைபாடுகளை திருத்தியமைத்து அது நிலையான சொத்து ஆவணத்தில் சமகாலப்படுத்தப்பட்டுள்ளது. மதிப்பீட்டிற்கு உட்படுத்த வேண்டும் என அடையாளம் காணப்பட்ட சொத்து பிரிவு ஆவணம் சமகாலப்படுத்தப்பட்டது. மதிப்பீட்டிற்கு உட்படுத்த வேண்டும் என அடையாளம் காணப்பட்ட சொத்துக்கள் பிரிவு மதிப்பீட்டிற்கு உட்படுத்துவதற்கு பொருத்தமான விடய அறிவு கொண்ட குழுவினை நியமித்து அது தொடர்பில் தேவையான அடிப்படைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டில் இறுதி கண்கினை சமர்பிக்கும் போது உரிய கணக்குகளில் ஒப்பீடுகளை மேற்கொள்ளும் செயற்பாடுகளை மேற்கொண்டு சமர்பிக்கப்படுகின்றது.

.(ஆ) 2021 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி வெளிப்பாடுகிளல் சமர்பிக்கும் போது இத் தவறினை திருத்தியமைத்து சமர்பிக்கப்பட்டுள்ளது.

(இ) மூலதன வழங்களுக்கு அமைய பொறுப்பேற்க்கப்படும் சொத்து தேய்மானத்தை மேற்கொள்ளுவது தொடர்பான பிரச்சினைகள் பல ஆண்டுகள் தொடக்கம் காணப்படுவதுடன் இது தொடர்பில் தகவல்களை வெளியிடும் போது பல பிரயோக பிரச்சினைகள் எழுந்தன. இது எவ்வாறாக இருப்பினும் காணப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 2021 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி வெளிப்பர்டுகளை சமர்பிக்கும் போது இச் செயற்பாடுகளைப் பூர்த்தி செய்து உரிய கணக்குகளில் ஒப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

(ஈ) 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டுவரை நிர்மாண செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்களின் பெறுமதி ரூபா 89.6 மில்லியன்

நிர்மாண செயற்திட்டங்கள் முடிவுறாப் பணிகள் கணக்கின் மூலம் சொத்துக் கணக்கிற்கு 2022-05-31 ஆம திகதி தொடக்கம் மாற்றப்பட்டுள்ளது. எஞ்சிய செயற்திட்டத்திற்காகவும் பணிகளைப்பூர்த்தி செய்யும் உறுதியினைப் பெற்றுக் கொண்டு உரிய சொத்துக் கணக்குகளுக்கு மாற்றப்பட்டு அதற்குரிய தேய்மானத்தைக் கணிப்பீடு செய்யும் நிதி வெளிப்பாடுளில் உரியவாறு குறிப்பிடுவறதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

(உ) 2021 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி வெளிப்பாடுகளை சமர்பிக்கும் போது இத் தவறினைத் திருத்தியமைத்து சமாபிக்கப்பட்டுள்ளது.

(ஊ) முகாமைத்துவ சபை அங்கத்தவர் செயற்பாட்டு பணிப்பாள் உள்ளிட்ட குழு மூலம் கடனை அறவிடுவது தொடர்பில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 2022.06.01 ஆம் திகதி தொடக்கம் மொத்த கடன் படுனர்கள் ரூபா 8.5 மில்லியன் மற்றும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள 09 கம்பனிகள் தற்போது ரூபா 0.3 மில்லியன் நிதியை அறவிட்டுள்ளது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தீர்க்கப்படாத நிலுவைகளை தொடர்புபடுத்தும் பட்சத்தில் 2022 பெப்ரவரி மாதத்தில் அனைத்துக் கடன்படுனர்களுக்கும் 2022.12.31 ஆம் திகதியன்று நிலுவையினை உறுதிப்படுத்தும் ஆவணம் ஆவணப்படுள்ளதுடன் இது வரையில் எந்தவொரு நிறுவனமும் தீர்க்கப்படாத நிலுவைகள் எமக்கு அறிக்கைப்படுத்தப்படவில்லை என்பதனை தயவாய் அறியத்தருகிறேன். இது எவ்வாறாக இருப்பினும் தொடர்ந்தும் இது தொடர்பில் கண்டறிந்து ஒப்பீட்டு நிலுவைகள் இருப்பின் அவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

. (ஒ) 2021 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி வெளிப்பாடுகளை சமர்பிக்கும் போது இத்தவறினை திருத்த்தியமைத்து சமர்பிக்கப்பட்டுள்ளது.

2.(அ) நிதிக்குப் பொறுப்பாக செயற்படும் உத்தியோத்தர்களுக்காக பிணைப் வைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு முகாமைத்துவ சபை அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன், அவ்வவ் உத்தியோகத்தர்களுக்காக பிணை நிதியினை பெற்று வைப்பில் இடுவதற்கு ஏற்கனவே செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) (i) 2022 ஆம் ஆண்டின் முதலாவது கட்டத்தின் கீழ் பதிவநிலை உத்தியோகத்தர்களுக்காக வருடாந்த செயற்சாதனை கணக்கினை தயாரித்து உடன்படிக்கையினை கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ii) மானிடவள அபிவிருத்தித் திட்டத்தினை தயாரித்தல், கொள்ளவு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்தல், திறன் அபிவிருத்தி

வேலைத்திட்டங்களை நடாத்துவது தொடர்பான பொறுப்பு உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) இற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள கடமையாகும்.

## 2.3 ஏனைய விடயங்கள்

(அ) 2022.06.30 ஆம் திகதியன்று மொத்த கடன் படுனர்களில் ரூபா 8.5 மில்லியன் அறவிடப்பட்டுள்ளது. எஞ்சியது கிடைக்க வேண்டிய நிலுவை மற்றும் விஷேடமாக நீண்டகாலம் தொடக்கம் கிடைக்க வேண்டிய நிலுவையினை அறவிடுவதற்கு அதிகார சபையின் அறவிட முடியாக் கடன் ஒதுக்கீடு மற்றும் நீக்கும் கொள்கை மற்றும் அது தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள குழு மூலம் தற்போது தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகினறன. இதற்கு அமைய தற்போது நிலுவை நிதியினை அறவிட வேண்டிய நிறுவனங்களின் பொறுப்பாளர்களுடன் ஏற்கனவே கலந்துரையாடல்கள் மற்றும் நினைவு கூறல் ஆவணங்கள் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் காலங்களிலும் இந் நிறுவனங்களுக்கு அறவுறுத்தல்களை மேற்கொள்ள இருப்பதுடன் அனைத்த நிறுவனங்களுக்கும் அழைப்பாணையினை அனுப்புவதற்கும், அது தொடர்பில் வரவேற்பினை வழங்காத நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நவடிக்கை எடுப்பதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது இச் செயற்திட்டங்களுக்கு உரிய இறுதிக் கட்டணப் பட்டியல் மற்றும் இடைக்கால கட்டணம் கிடைத்துள்ளதுடன் அக் கட்டணத்தை செலுத்தும் போது இம் முற்பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) இத் தவறினை திருத்தியமைத்து 2021 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதம் ரூபா 10,569,466.52 நிதி வருமானத்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

(இ) இவ்வாறு தேக்கிவைக்கும் வரி நீண்டகாலம் தொடக்கம் வருடாந்தம் நிதி வெளிப்பர்டகளில் குறிப்பிடப்படுகின்ற போதிலும் எமது அதிகார சபை (நட்டத்தில் இயங்கும் நிறுவனம் என்பதனால்) வருமான வரியினை செலுத்துவதற்கு உரியதற்றது என்பதனால் வருமான வரியினைக் கணிப்பீடு செய்யும் போது அவ் அறிக்கைகளில் ஒப்பீடுகளை மேற்கொள்வதற்கு அவசியமற்றது என்பதுடன் இதனால் அக் கணக்கில் நிலுவை காணப்படுகின்றது. இது எவ்வாறாக இருப்பினும் இரண்டு வருடங்களைவிட மேற்பட்ட பழைய தேக்கிவைக்கும் வரி வருமானங்களுக்கு தீர்க்கமுடியாது என்பதனால் அதனை பரிசோதனை செய்து 2022 நிதி வெளிப்பாடுகளில் சமர்பிக்கும் போது திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) வரி உடன்படிக்கையினை மறுசீரமைப்பது தொடர்பில் தேவையான ஆலோசனைகள் கடைத்துள்ளதுடன் தெளிவான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அதிகார சட்டப் பரிவின் ஊடாக சட்டமாதிபரிடம் ஆலேசனைகள் கோரப்பட்டுள்ளன. இவ் ஆலோசனைகள் கிடைத்தன் பின்னர் குத்தகை உடன்படிக்கையினை மறுசீரமைத்து அதற்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

(உ) 2022 ஆம் ஆண்டில் பணிக்கொடைக் கொடுப்பனவிற்காக மீண்டெழும் செலவினத்தின் கீழ் நிதி அமைச்சினால் நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் அவ் ஆண்டு தொடக்கம் பணிக்கொடை நிதியத்தில் காணப்பட்ட நிதி மூலம் பணிக்கொடை கொடுப்பனவு விடுவிக்கப்படுவதுடன் விடுவிக்கப்படாத நிதியினை கணிப்பீடு செய்து பயன்மிக்க முதலீடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

(ஊ) குத்தகை உடன்படிக்கையினை மறுசீரமைப்பது தொடர்பில் தேவையான ஆலோசனைகள் கிடைத்துள்ளதுடன் தெளிவான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அதிகார சபையின் சட்டப் பிரிவின் ஊடாக சட்டமாதிரிபரின் ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளன. அவ் ஆலோசனைகள் கிடைத்தன் பின்னர் குத்தகை உடன்படிக்கையினை மறுசீரமைத்து அதற்கு அமைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் இருப்பு நட்டத்தை அறவிடுவது தொடர்பில் அவ் ஆலோசனைகளுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(எ) தற்போது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள 14 நிர்மாண நிறுவனங்களிடமிருந்து அறவிட வேண்டிய நிதி மூலம் ரூபா 1,019,165.31 உரிய ஒப்பந்த நிறுவனத்தின் மூலம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய அறவிட வேண்டிய நிதியை எதிர்வரும் கால்ங்களில் செலுத்தப்படும் கட்டணப் பட்டியல் மூலம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

(ஏ) தங்குமிட கட்டத்தின் நிர்மாண செயற்திட்டத்திற்குரியதாக அதன் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படும் வேளையில் கொவிட் 19 தெற்று நோய் நிலமை ஏற்பட்டமை மற்றும் நாட்டில் போக்குவரத்து வரையறைகள் விதிக்கப்பட்டமை, காரணமாக இக் கட்டம் நாட்டின் அவசியத் தேவையான தனிபமைப்படுத்தப்படும் நபர்களுக்கான தனிப்படுத்தப்படும் மத்திய நிலையமாக வழங்குத்கும் மற்றும் மூலப் பொருட்களின் பற்றாக்குரை மற்றும் காலநிலையினைக் கருத்திற் கொண்டு ஆலூாசகர் நிறுவகத்தினால் நிர்மாண காலத்தை நீடிப்பதற்கு பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இச் செயற்திட்டத்திற்குரியதாக பௌதீக ரீதியில் பூர்த்தி செய்து கையளிக்க மற்றும் பொறுபேற்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இருப்பினும் பணிகளுக்காக ஒப்பந்த் நிறுவனத்தினால் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளமையினால் ஆலோசனை நிறுவனத்தினால் இளுதி கட்டணப் பட்டியல் பரிந்துரை செய்து சமர்பிக்கப்பட்டுள்ளது. சமர்பிக்கப்பட்டுள்ள நான்காவது கட்டணப் பட்டியலின் மொத்த பெறுமதி அறவிட வேண்டிய முற்பண நிதியை விட குறைவானது என்பதனால் இறுதிக் கட்டணப் பட்டியல் கிடைத்தன் பின்னர் அவ்விரு கட்டணங்களுக்காகவும் முற்பண நிதியினை அறவிடுவதற்கு ஏற்பார்டுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும் அது வரை முற்பணம் அறவிட இருப்பதாக கணக்கு செயற்பார்டுகளின் போது சித்தரித்துக் காண்பிக்கப்படுவதாக கருத்திற் கொள்ளும் வேண்டுகின்றோம். .

ஆடைகளை மாற்றுவதற்கான அறை மற்றும் உணவகங்களின் மறுசீரமைப்பு செயற்திட்டத்திற்குரியதாக செயற்திட்ட செயற்பாடுகள் 2018 ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டது. அத்துடன் இச் செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்ட கட்டம் 20 வருடங்களைவிட பழைய கட்டம் என்பதானால் இதன் புணரமைப்பு செயற்பாடுகள்

மேற்கொள்ளப்பட்ட போதிலும் ஒரு சில குறைபாடுகள் எழுந்தமையினால் கையளித்தல் மற்றும் பொறுப்பேற்கும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தாமதம் ஏற்பட்டது. இது எவ்வாறாக இருப்பினும் தற்போது இச் செயற்திட்டத்திற்குரியதாக இறுதி கட்டணப் பட்டியல் ஆலோசகர் நிறுவகத்தினால் பரிந்துரை செய்து சமர்பிக்கப்பட்டதுடன் அதன் மூலம் முழுமையான முற்பண நிதி குறைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பணிகளை பூர்த்தி செய்யும் சான்றிதழ் இது வரையில் வெளியிடாமையினால் கொடுப்பனவு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையினால் இந் நிதி முற்பண கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ளது. இச் செயற்திட்டத்திற்கு உரிய முற்பண நிலுவையினை ஏற்பகனவே தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஒ) இது தொடர்பில் தொடர்ச்சியாக ஒப்பந்த நிறுவனத்திற்கு குறைபாடுகளைக் காண்பித்து எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டது. இதற்கு அமைய இடைக்கிடையே ஒப்பந்த நிறுவனத்தினால் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இருப்பினும் அதிகார சபைக்கு அது தொடர்பில் திருப்தியடைய முடியாமையினால் முன்னாள் பணிப்பாளர் சபை மற்றும் தலைவரினால் சட்டமாதிபரின் ஆலோசனைகளுக்கு அமைய இலங்கையின் ஒரேயொரு சர்வதேச நிறுவனமான இவ் விளையாட்டு மைதானம் நாட்டின் விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் பயிற்சியளிப்பு செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாமையினால் மீண்டும் ஓடுபாதை மற்றும் விளையாட்டு மைதானத்தை நவீனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இது எவ்வாறாக இருப்பினும் இந் நிர்மாண கால எல்லைக்குள் இடைக்கிடையே குறைபாடுகள் மேற்பார்வை செய்யப்பட்டதுடன் அது தொடர்பாக ஒப்பந்ததாரருக்கு அறிவுறுத்தி இறுதிப் பட்டியல் மற்றும் தேக்கிவைக்கப்பட்ட நிதி (ரூபா 11,000,000/=) செலுத்தாது இருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ஓ) இப் பெறுமதிக்கு உரியதாக தேக்கி வைக்கப்பட்ட நிதி தொடர்பில் இது வரை கோரிக்கை விடுக்கப்படவில்லை என்பதுடன் குறைபாடுகள் இன்றி இருப்பின் நிதியை விடுவிக்காதிருப்பதற்கும் எஞ்சிய நிதியை வருமானமாக கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

(ஐ) இவ் ஆண்டில் அத்தியவசிய வெற்றிட பதிவிகளுக்கு சேர்த்துக் கொள்வதற்காக பத்திரிகை விளம்பர அறிவித்தல் கோரப்பட்ட போதிலும் முகாமைத்துவத சேவை திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றரிக்கை DMS/Policy/Recruitment இலக்கம் கொண்ட 2019.11.20 ஆம் திகதிய சுற்றரிக்கை மற்றும் DMS/Cir/2020 இலக்கம் கொண்ட 2020.02.21 ஆம் திகதிய சுற்றரிக்கைகள் மூலம் வழங்கப்பட்ட ஆலேசனைகளுக்கு அமைய ஆட்சேர்ப்பினை மேற்கொள்ள முடியவில்லை. இருப்பினும் நிருவனத்தின் நிருவாக செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக அத்தியவசிய பராமரிப்பு உத்தியோகத்தர் பதவி மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்காக நியாயநிலைப்படுத்தி பெற்றுக் கொள்ளப்பட்ட அங்கீகாரத்திற்கு அமைய இவ் இரு பதவிகளுக்காக 2022 ஆம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டது.

**සුගතදාස ජාතික ක්‍රීඩා සංකීර්ණ අධිකාරිය,**
**තැ.පෙ.2211, ආතර් ද සිල්වා මාවත,**
**කොළඹ 13.**

**දුරකථන : 0112 384 385 / 0112 445 677**
**ෆැක්ස් : 0112 44 56 75**
**විද්‍යුත් තැපැල් : sugathadasaindoor@gmail.com**

බෝගම්බර ක්‍රීඩාංගණය
**081 22 35 395**

නුවරඑළිය තුරඟතරග පිටිය
**052 22 22 659**

බෙලිඅත්ත පිහිණුම් තටාකය
**047 22 51 685**